www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## சுராவின்

# தமிழ் உரைநூல்

## மேல்நிலை - முதலாம் ஆண்டு





### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- புதிய பாடதிட்டத்தின்படி, பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, கூடுதல் வினா விடைகள். மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018 (அ.மா.வி.), முதல் பருவ இடைத்தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2018 வினாக்கள், மார்ச் 2019, ஜூன் 2019, காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018, காலாண்டுத் தேர்வு மற்றும் அரையாண்டுத் தேர்வு 2019 – வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.
- மார்ச் 2020 அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் – விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# www.Padasalai.Net

**Padasalai Official – Android App – Download Here**

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் | 1-4 | |
| 1. | மொழி<br>**என்னுயிர் என்பேன்** | யுகத்தின் பாடல் **(செய்யுள்)**<br>பேச்சுமொழியும் கவிதை மொழியும் **(உரைநடை)**<br>நன்னூல் பாயிரம் **(செய்யுள்)**<br>ஆறாம் திணை **(துணைப்பாடம்)**<br>மொழி முதல், இறுதி எழுத்துகள் **(இலக்கணம்)** | 5-32 | ஜூன் |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**மாமழை போற்றுதும்** | இயற்கை வேளாண்மை **(உரைநடை)**<br>ஏதிலிக்குருவிகள் **(செய்யுள்)**<br>காவியம் **(செய்யுள்)**<br>திருமலை முருகன் பள்ளு **(செய்யுள்)**<br>ஐங்குறுநூறு **(செய்யுள்)**<br>யானை டாக்டர் **(துணைப்பாடம்)**<br>புணர்ச்சி விதிகள் **(இலக்கணம்)** | 33-66 | ஜூன் |
| 3. | பண்பாடு<br>**பீடு பெற நில்** | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு **(உரைநடை)**<br>காவடிச்சிந்து **(செய்யுள்)**<br>குறுந்தொகை **(செய்யுள்)**<br>புறநானூறு **(செய்யுள்)**<br>வாடிவாசல் **(துணைப்பாடம்)**<br>பகுபத உறுப்புகள் **(இலக்கணம்)**<br>திருக்குறள் **(வாழ்வியல்)** | 67-114 | ஜூலை |
| 4. | கல்வி<br>**கேடில் விழுச்செல்வம்** | தமிழகக் கல்வி வரலாறு **(உரைநடை)**<br>பிள்ளைக்கூடம் **(செய்யுள்)**<br>நற்றிணை **(செய்யுள்)**<br>தொல்காப்பியம் **(செய்யுள்)** சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல்<br>இதழாளர் பாரதி **(துணைப்பாடம்)**<br>படைப்பாக்க உத்திகள் **(இலக்கணம்)** | 115-144 | ஆகஸ்ட் |






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



| | | | | |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் **நாளெல்லாம் வினைசெய்** | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு **(உரைநடை)** | 145-186 | **ஆகஸ்ட்** |
| | | சீறாப்புராணம் **(செய்யுள்)** | | |
| | | அகநானூறு **(செய்யுள்)** | | |
| | | பிம்பம் **(துணைப்பாடம்)** | | |
| | | பா இயற்றப் பழகலாம் **(இலக்கணம்)** | | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **பல்கலை நிறுவு** | காலத்தை வென்ற கலை **(உரைநடை)** | 187-218 | **அக்டோபர்** |
| | | ஆத்மாநாம் கவிதைகள் **(செய்யுள்)** | | |
| | | குற்றாலக் குறவஞ்சி **(செய்யுள்)** | | |
| | | திருச்சாழல் **(செய்யுள்)** | | |
| | | இசைத்தமிழர் இருவர் **(துணைப்பாடம்)** | | |
| | | கலைச்சொல்லாக்கம் **(இலக்கணம்)** | | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **வையத் தலைமை கொள்** | காற்றில் கலந்த பேரோசை **(உரைநடை)** | 219-250 | **நவம்பர்** |
| | | புரட்சிக்கவி **(செய்யுள்)** | | |
| | | பதிற்றுப்பத்து **(செய்யுள்)** | | |
| | | சிந்தனைப் பட்டிமன்றம் **(துணைப்பாடம்)** | | |
| | | ஆக்கப்பெயர்கள் **(இலக்கணம்)** | | |
| 8. | மனிதம், ஆளுமை **யாரையும் மதித்து வாழ்** | தாகூரின் கடிதங்கள் **(உரைநடை)** | 251-286 | **டிசம்பர்** |
| | | ஒவ்வொரு புல்லையும் **(செய்யுள்)** | | |
| | | தொலைந்து போனவர்கள் **(செய்யுள்)** | | |
| | | மனோன்மணீயம் **(செய்யுள்)** | | |
| | | செவ்வி **(துணைப்பாடம்)** | | |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுதல், விடைக்கேற்ற வினா அமைக்கவும், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | 287-310 | |
| அரசு மாதிரி வினாத்தாள் 2018, காலாண்டு, அரையாண்டுத் தேர்வு -2019 வினாத்தாள்கள் | | | 311-322 | |
| பொதுத்தேர்வு மார்ச் வினாத்தாள் 2020 - விடைகளுடன் | | | 323-330 | |

www.surabooks.com





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

**இயல் – 1**

## யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

– சு.வில்வரத்தினம்

(அ.மா.வி 2018; காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019)

## நன்னூல் – பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

பாவகை : நூற்பா – பவணந்தி முனிவர்

**இயல் – 2**

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

**இயல் – 3**

## குறுந்தொகை

(மு.ப.இடைத்தேர்வு, காலாண்டுத் தேர்வு 2018)

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

– வெள்ளி வீதியார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

**இயல் – 3**

## புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

**இயல் – 3**

## திருக்குறள்

**அடக்கமுடைமை**

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. (காலாண்டுத் தேர்வு 2019)

**ஒப்புரவறிதல்**

4. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு. (அரையாண்டுத் தேர்வு 2019)

6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (மு.ப.இடைத்தேர்வு 2018)

**நிலையாமை**

13. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**புகழ்**

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (காலாண்டுத் தேர்வு 2018)

9. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**துறவு**

15. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

16. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

19. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (அ.மா.வி 2018)



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

இயல் 1 என்னுயிர் என்பேன் - மொழி

# யுகத்தின் பாடல்

- சு.வில்வரத்தினம் கவிதைப்பேழை

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 1. என் அம்மை, ஒற்றியெடுத்த<br>நெற்றிமண் அழகே!<br>வழிவழி நினதடி தொழுதவர்,<br>உழுதவர், விதைத்தவர்,<br>வியர்த்தவர்க்கெல்லாம்<br>நிறைமணி தந்தவளே!<br>உனக்குப்<br>பல்லாண்டு<br>பல்லாண்டு<br>பல்லாயிரத்தாண்டு | என் அன்னை பூமித்தாய். பூமித் தாயின் நெற்றி மண் அழகு. பூமித்தாயின் திருவடிகளைக் காலம் காலமாக தொழுகின்றனர். தொழுது வருகின்றனர்.<br>உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் எல்லாருக்கும் நிறைந்த பொருள்களை அள்ளித் தந்தவள் நம் பூமித்தாய்.<br>அவளுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நாம் பல்லாண்டு பாட வேண்டும்.<br>அது போல நம் தமிழ்த்தாய் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை நமக்கு ஏற்பட்ட இடர்களைக் களைந்து உயர் தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கின்றாள். |
| 2. பாடத்தான் வேண்டும்!<br>காற்றிலேறிக்<br>கனைகடலை, நெருப்பாற்றை,<br>மலைமுகடுகளைக் கடந்து<br>செல் எனச் செல்லுமோர் பாடலை<br>கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்<br>காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்<br>உரமெலாம் சேரப்<br>பாடத்தான் வேண்டும்! | பாடத்தான் வேண்டும்! காற்றில் ஏறி, கனைகடலை, நெருப்பாற்றை மலை முகடுகளைக் கடந்து செல் எனச் செல்லும் ஓர் பாடலை நாம் பாடத்தான் வேண்டும்.<br>கடல் சீற்றத்தால் கபாடபுரங்களை இம் மண் இழந்த போதும் காலத்தால் என்றும் அழியாத தொல் கனிமங்களின் உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும். |
| ஏடு தொடக்கி வைத்து என்னம்மை<br>மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த<br>விரல்முனையைத் தீயிலே தோய்த்து<br>திசைகளின் சுவரெலாம்<br>எழுதத்தான் வேண்டும்<br>எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>- சு.வில்வரத்தினம் | ஏடு தொடக்கி வைத்து என் தாய் மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த விரல் முனையைத் தீயிலே தோய்த்து எண் திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும் எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>என் தாய் மண்ணின் பெருமையை எல்லாத் திசைகளிலும் பரவச் செய்ய நாம் தாய் மண்ணின் புகழைப் பல்லாண்டு வாழ்த்துப்பாட வேண்டும். |

**புதுக்கவிதை என்பதன் விளக்கம்:**

- மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனத்தில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
- இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

**நூற்குறிப்பு :**

வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப் பகுதியில் இடம் பெறுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு :**

- கவிஞர் சு. வில்ரத்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில் பிறந்தவர்.
- இவருடைய கவிதைகள் மொத்தமாக 'உயிர்த்தெழும் காலத்துக்காக' எனும் தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன.
- இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## அரசு தேர்வு வினா - விடைகள்

1. வால்ட் விட்மன் எந்த நாட்டைச் சார்ந்தவர். மு.ப.இடைத்தேர்வு 2018

அ) பிரான்சு ஆ) சிலி இ) அமெரிக்கா **விடை: இ) அமெரிக்கா**

2. 'புல்லின் இதழ்கள்' நூலின் ஆசிரியர். ஜூன் 2019

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே இ) பாப்லோ நெரூடா

**விடை: அ) வால்ட் விட்மன்**

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. பேச்சுமொழியை இவ்வாறு அழைப்பர்.

அ) எழுத்து மொழி ஆ) நேரடி மொழி இ) கவிதை **விடை: ஆ) நேரடி மொழி**

2. கவிதையினை, 'இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை' என்றும் கூறியவர். மார்ச் 2020

அ) பாரதியார் ஆ) இந்திரன் இ) பாரதிதாசன் **விடை: அ) பாரதியார்**

3. 'மொழியென்ற ஒன்று பிறந்தவுடன் உலகம்' என்பதும் 'நான்' என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலை நிறுத்துக் கொள்கின்றன எனக் கூறியவர்

அ) எர்னஸ்ட் காசிரர் ஆ) பாரதியார் இ) இந்திரன் **விடை: அ) எர்னஸ்ட் காசிரர்**

4. எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி .................... மிக அருகில் உள்ளது.

அ) கேட்பதற்கு ஆ) பேசுவதற்கு இ) உணர்ச்சிக்கு **விடை: இ) உணர்ச்சிக்கு**

5. பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் ................ போல் இயங்குகிறது.

அ) கண் ஆ) உயிர் இ) மேல் தோல் **விடை: இ) மேல் தோல்**

6. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்

அ) மல்லார் மே ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன்

**விடை: இ) வால்ட் விட்மன்**

7. ஸ்டெஃபான் மல்லார் மே எந்த நாட்டைச் சேர்ந்தவர்.

அ) அமெரிக்கா ஆ) பிரான்சு இ) இத்தாலி **விடை: ஆ) பிரான்சு**

8. குறியீட்டுக் கவிதைகள் என்பது.

அ) இயற்கையைப் பதிவு செய்வது
ஆ) பொருளைப் பதிவு செய்வது
இ) நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வது.

**விடை: இ) நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வது**

9. லத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர்.

அ) மல்லார் மே ஆ) பாப்லோ நெரூடா இ) வால்ட் விட்மன்

**விடை: ஆ) பாப்லோ நெரூடா**

10. தன்னுடைய கவிதைகளுக்காக 1971-ஆம் ஆண்டு இலக்கியத்திற்கன நோபல் பரிசு பெற்றவர்.

அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன் இ) பாப்லோ நெரூடா

**விடை: இ) பாப்லோ நெரூடா**





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கூடுதல் நெடுவினா

**1. அ. முத்துலிங்கத்தின் ஆறாம் திணை கட்டுரை குறித்துத் திறனாய்வு செய்க.**

**முன்னுரை:**

நவீன தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தமிழ் தந்திருக்கும் முக்கியமான கொடை என்று அ.முத்துலிங்கம் படைப்புகளைச் சொல்லலாம். அவர் கதைகளில் காணப்படுவது வெவ்வேறு தேசங்கள், வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு மனிதர்கள். ஆனால் தமிழ் வாசகருக்கு அந்நியப்படாமலும் தீவிரம் சிதைக்கப்படாமலும் ஆறாம் திணை படைக்கப்பட்டுள்ளது.

**இலங்கை கலவர நிகழ்வு:**

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை இக்கதையின் மூலம் அறிய முடிகிறது. எங்கே தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தின் காரணமாக தன் வீட்டின் உரிமையாளரான **பீரிஸ்ஸிடம்** பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டு இரவு முழுவதும் விழித்திருந்த செயல் ஒவ்வொரு மனிதனையும் பாதிக்கும்படியாக உள்ளது. மொழிப்பிரச்சனை, இனப்பிரச்சனை இவற்றால் மனித நேயமற்ற செயல்கள் இப்பூமியின் மேல் நடைபெறுகின்றன என்பதை ஆறாம் திணை கட்டுரையின் மூலம் உணரலாம்.

**பிரீஸ்ஸின் செயல்:**

தன்னை நம்பி வந்தவர்களைப் பாதுகாக்க வேண்டும். அது தன் கடமை என உணர்ந்து இரவு முழுவதும் விழித்திருந்து யாராலும் அவர்களுக்குத் துன்பம் நேராமல் பாதுகாத்த பண்பு பாராட்டிற்குரியது.

**முகாமில் நடந்த நிகழ்வு:**

அகதியாக முகாமிற்கு அழைத்துச் செல்லும் பொழுது தனக்கு வேண்டிய பொருளை டேனியல் டிஃபோ எழுதிய **"ராபின்சன் குரூசோ"** என்ற புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டதாக அவர் கூறும் பொழுது புத்தகத்தின் மீது வாசிப்பின் மீது அவருக்கிருந்த ஆர்வத்தை உணர முடிந்தது. முகாமில் தனக்குக் கிடைத்த நீளமான இரவு உடையும் அதை அவர் நீண்ட நாள்கள் பயன்படுத்தி வந்ததையும் குறிப்பிட்டது அவரின் பழைமையை மறவாத நற்பண்பைக் காட்டுகிறது. உணவிற்கு வரிசையில் சென்ற பொழுது ஏற்பட்ட கசப்பான உணர்வையும் அதிலிருந்து நிச்சயம் ஒரு நாள் வெளிவருவோம் என்ற அவருடைய போராட்ட உணர்வையும் தன்னம்பிக்கையையும் அறியமுடிகிறது.

**உயிர் வாழும் திறமை:**

கனடாவில் தான் சந்தித்த தமிழ் இளைஞன் இலங்கையிலும் பாங்காக்கிலும் சிறையில் இருந்ததையும் ரஷியாவில் இருந்தபொழுது பனிப்புதைவில் மயிரிழையில் உயிர் தப்பியதையும் சிங்கப்பூரில் ஒன்பது நாள் கெடுவை மீறி தங்கியதற்காக ஒன்பது பிரம்படி வாங்கியதாகக் கூறியதைப் படித்தவுடன் ஒவ்வொரு நாடும் தங்களுக்கென கடுமையான சட்டங்களை இயற்றியுள்ளது தெரியவருகிறது.

அமெரிக்கவிற்குச் சென்றபொழுது அவனுடைய கள்ள பாஸ்போர்ட்டால் சிறைத் தண்டனை கிடைத்தது. சிறைவாசம் முடிந்து கனடாவிற்கு அகதியாக வந்தார். வேலைக்காக 17 கம்பெனிகளுக்கு நேர்முகத் தேர்விற்குச் சென்றார். அவர்கள் கேட்ட கேள்வி "உங்கள் கனடிய அனுபவம் என்ன? திறமை என்ன?" என்ற வினாவிற்கு 18ஆவது கம்பெனியில் அவர் அளித்த பதில் "கனடிய அனுபவம் எனக்குக் கிடையாது; ஆனால், என்னிடம் திறமை அதிகம்" என்றார். எப்படி என அவர்கள் கேட்டதற்கு, "என் திறமை நான் உயிர் வாழ்வது" இதுநாள் வரை நான் உயிர் வாழ்கிறேன் என்றால் அது என் திறமை" என்று அவர் கூறிய வார்த்தை அனுபவத்தின் சொல் கடினமான சூழ்நிலையில் தன்னம்பிக்கையை விடாது முயற்சியுடன் போராடுவதே திறமை என்பதை உணர முடிந்தது. அகதியாக வாழ்பவரின் வலியையும் வேதனையையும் உணரலாம்.

**சங்க இலக்கிய நிகழ்வு:**

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் இடம்பெயர்ந்து கொண்டேதான் இருக்கிறான். இதற்கு உதாரணம் சங்க இலக்கியங்கள் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்ட பிரிந்து செல்லும் நிகழ்வு கூறப்படுகிறது. அரசனின் கொடுமைக்கும், சீற்றத்திற்கும் பயந்து ஊரைவிட்டு வெளியேறியவர்களைப் போலத்தான் அகதிகளாக இப்பொழுதும் இருப்பவர்களைச் சொல்லலாம்.

**கனடாவும் தமிழ் இலக்கியமும்:**

கனடாவும் தமிழ் இலக்கியத்திற்கும் தொடர்பு உண்டு. திருக்குறளையும், திருவாசகத்தையும் மொழி பெயர்த்த ஜி.யு. போப் கனடாவில் பிறந்தவர். தமிழ் அகதிகள் கனடாவிற்குக் குடிபெயர்ந்தவுடன் வேலையைப் பற்றியோ, உணவைப் பற்றியோ, உரிமைப் பற்றியோ கவலைப்படாமல் குடியேறிய சில வருடங்களிலேயே பத்திரிகைகள், இலக்கிய இதழ்களையும் ஆரம்பித்துத் தங்கள் புது வாழ்க்கையைப் பதிவு செய்தனர். இதன் மூலம் அவர்களின் மொழிப்பற்றையும் இலக்கிய உணர்வையும் அறியலாம்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



# இயற்கை வேளாண்மை

உரைநடை உலகம்

**தெரிந்து தெளிவோம் :**

- பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன்மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.
- "இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்."

– மசானபு ஃபுகோகோ

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2019

1. **மண்ணுக்கு வளம் சேர்ப்பன –**
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
   இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
   **விடை: ஈ) இவை மூன்றும்**

காலாண்டுத் தேர்வு 2019

2. **கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை**
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்
   i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ – தவறு, ஆ– சரி
   **விடை: i) அ – மட்டும் சரி**

**குறுவினா**

அரையாண்டுத் தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2019

1. **தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.**
   (i) தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம் ஆகும்.
   (ii) பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சமாகும். இது ஒரு சிறந்த காற்றுத் தடுப்பான் ஆகும்.
   (iii) ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கின்ற தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனைமரம் வளர, அதிக அளவுக்குத் தண்ணீர்த் தேவையில்லை.
   (iv) பனை ஏழு ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கிவிடும். நுங்கு, பதநீர் முதலியன கிடைக்கின்றன. அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

**சிறுவினா**

1. **வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.**

   காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020

   **வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:**
   (i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை 'இயற்கைப் பூச்சிக்கொல்லி' என்கிறோம்.
   (ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.
   (iii) வேதிகலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும். இதனால் வேதிகலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.

www.surabooks.com



orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



**2. உங்களது மழைக்கால அனுபவங்களைக் கவிதையாக வெளிப்படுத்துக.**

நீ
வரும்போது
மேகங்கள் கருமையாகும்
மனமோ மகிழ்ச்சியாகும்.
நீ
என் மீது பட்டதும்
உடலும் உள்ளமும் சிலிர்க்கும்
என்னுடன் சேர்ந்து மண்ணும்.

உன்னோடு நனைந்து நனைந்து
ரம்மியமாக ரசிப்பேன்.
உன்னை
என் இரு கைகளில் பிடிக்கும்போது
அளவில்லா ஆனந்தம்
எனக்கும் உனக்குந்தான்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. உலகச் சிட்டுக்குருவி நாள் ----------** மு.ப.இடைத்தேர்வு 2018

அ) மார்ச் - 20 ஆ) அக்டோபர்- 20
இ) டிசம்பர் - 20 ஈ) ஜுன் - 20

**விடை:** அ) மார்ச் - 20

☆☆☆

**மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்**

# இயல் 2 காவியம்

- பிரமிள் **கவிதைப்பேழை**

**பாடல்**

**சிறகிலிருந்து பிரிந்த**
**இறகு ஒன்று**
**காற்றின் தீராத பக்கங்களில்**
**ஒரு பறவையின் வாழ்வை**
**எழுதிச் செல்கிறது .**



– பிரமிள்

**பொருளுரை :**

இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர். சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது தன் வாழ்வை எழுதுகிறது. வாழ்வு என்பது காவியத்துக்கான பொதுவான பாடுபொருள். சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.

**ஆசிரியர் குறிப்பு :**

- பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம் இலங்கையில் பிறந்தவர். இவர் பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனை பெயர்களில் எழுதியவர்.
- புதுக்கவிதை, விமர்சனம்,சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்தே தளத்தில் இயங்கியவர். ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
- லங்காபுரிராஜா உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் நட்சத்திரவாசி என்னும் நாடகமும் வெயிலும் நிழலும் உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# ஐங்குறுநூறு

- பேயனார் கவிதைப்பேழை

பாடல்

**ஆடுகம் விரைந்தே**

**காயா கொன்றை நெய்தல் முல்லை**
**போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்**
**பூவணி கொண்டன்றால் புறவே**
**பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே.** – பேயனார்

**(கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412)**

**பொருளுரை :**



(பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன், அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்து விட்டதனை உணர்த்த நினைக்கிறான்)

“பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, விரைந்து வா” (என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்)

**சொல்லும் பொருளும் :**

மழைக்கால மலர்கள்



காயா கொன்றை நெய்தல் முல்லை தளவம் பிடவம்

1. காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் – மழைக்கால மலர்கள்
2. போது – மொட்டு
3. அலர்ந்து – மலர்ந்து
4. கவினி – அழகுற

**திணை** – முல்லை

**துறை** – பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.

**நூற்குறிப்பு :**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு நூறு பால்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது.
- ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்
  (i) குறிஞ்சித்திணை – கபிலர்
  (ii) முல்லைத்திணை – பேயனார்
  (iii) மருதத்திணை – ஓரம்போகியார்
  (iv) நெய்தல் திணை – அம்மூவனார்
  (v) பாலைத்திணை – ஓதலாந்தையார்
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர் புலந்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.
- இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

## கற்பவை கற்றபின்

**1. புணர்ச்சி விதிகள் ஏன்? இதிலிருந்து நீங்கள் பெறும் பயன்களைத் திரட்டுக.**

(i) சொற்கள் புணர்ச்சியின் போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர்.

(ii) மொழியைப் பிழையின்றிக் கையாளவும் பாடலடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்தறியவும் மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

(iii) எழுத்து வகையால் புணர்ச்சி நான்கு வகைப்படும்.

(iv) சொல் வகையால் புணர்ச்சி இரண்டு வகைப்படும்.

(v) பொருள் வகையால் புணர்ச்சி இரண்டு வகைப்படும்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. தமிழ் + அன்னை – சொற்புணர்ச்சியில் எழுத்துகள் சந்திக்கும் முறை ..............** மு.ப.இடைத்தேர்வு 2018

அ) உயிர் + உயிர் ஆ) மெய் + மெய்
இ) மெய் + உயிர் ஈ) உயிர் + மெய்

**விடை: இ) மெய் + உயிர்**

**2. உடம்படுமெய்ப் புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்** அ.மா.வி 2018

அ) கோவில் ஆ) பூக்கள் இ) வண்டிச் சக்கரம் ஈ) மரவேர்

**விடை: அ) கோவில்**

**3. பெருங்கலம் என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.** காலாண்டுத் தேர்வு 2018

அ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஆ) ஈறுபோதல், இனமிகல்
இ) ஈறுபோதல், ஆதிநீடல் ஈ) ஈறுபோதல், இனையவும்

**விடை: ஆ) ஈறுபோதல், இனமிகல்**

**4. ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல் :** மார்ச் 2020

அ) அச்சம் ஆ) காய்ச்சல் இ) கப்பல் ஈ) தேர்தல்

**விடை: ஆ) காய்ச்சல்**

## கூடுதல் வினாக்கள்

**1. 'திருப்புகழ்' இச்சொல்லில் புணர்ந்து வரும் புணர்ச்சி விதி.**

அ) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
இ) இயல்பினும் விதியினும்நின்ற உயிர் முன் கசதப மிகும்.
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும். **விடை: இ) இயல்பினும் விதியினும்நின்ற உயிர் முன் கசதப மிகும்.]**

### குறுவினா

**1. புணர்ச்சி விதிகள் என்றால் என்ன? அதன் பயன் யாது?**

(i) சொற்புணர்ச்சியின் போது நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் ஏற்படும் மாற்றங்களைச் சுருங்கச் சொல்லும் வரையறைகளைப் புணர்ச்சி விதிகள் என்பர்.

(ii) மொழியைப் பிழையின்றிக் கையாளவும், பாவடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்து அறியவும் மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் இப்புணர்ச்சி விதிகள் பயன்படுகின்றன.

**2. முற்றியலுகரப் புணர்ச்சி சான்று தந்து விளக்குக.**

முற்றுயலுகரப் புணர்ச்சி : நிலைமொழியின் இறுதியில் உள்ள முற்றியலுகரமும், குற்றியலுகரத்தைப் போலவேதான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும். பின் நிலைமொழி இறுதியில் உள்ள மெய் வருமொழி முதலெழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும்.

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு

- ஆர் பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. **உரைநடை உலகம்**

**ஆசிரியர் குறிப்பு :**

இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, 28 ஆண்டுகளாக, இடப்பெயராய்வில் ஈடுபட்டு வருகிறார். வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கிலுள்ள 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர். தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும் கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார். **அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம்** உள்ளிட்டவை இவர்தம் நூல்கள். 1984ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றவர். தற்போது ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருக்கிறார். பாடப்பகுதி **'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்'** என்னும் இவரது நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. **கூற்று – "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.**

**விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை: ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி**

**குறுவினா**

1. **"கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| | |
|---|---|
| தமிழ் | கோட்டை, கோடு |
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

**சிறுவினா**

1. **'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

(i) மலை, மனித சமுதாயத்தின் ஆதி நிலமாகும். **தமிழ் அகத்திணையியல்** மலை மற்றும் சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும். **காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019**

(ii) 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று உரைக்கிறது தொல்காப்பியம். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை.

(iii) பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப் பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர். பெருநிலப் பகுதிகளை ஆண்ட முடிமன்னர்களுக்குக்கூட வழங்காத பெருமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இக்குறுநிலத் தலைவர்களுக்கு அளிப்பதைப் பரக்கக் காணலாம்.

(iv) தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.

(v) கோடு என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளுண்டு. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதற்கு மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளே தகுந்த சான்றாகும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கற்பவை கற்றபின்

**1. எந்தெந்த நாடுகளில் காவடி ஆட்டம் இன்றளவும் நிகழ்த்தப்படுகிறது. அதற்கான காரணங்களைத் திரட்டிக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**மாணவன் 1** : காவடியாட்டம் என்பது தமிழகத்தில் நிகழ்த்தப்பெறும் நாட்டுப்புறக் கலைவடிவங்களில் குறிப்பிடத்தக்கது. காவடியைத் தோளில் சுமந்து இசைக்கேற்ப ஆடப்படும் ஆட்டம் காவடியாட்டம் என்று அழைக்கப்படுகிறது. காவடியானது இரு முனைகளிலும் உரிபோல் பொருட்களைக் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு தண்டினைத் தோளில் வைத்து சுமப்பதாகும்.

**மாணவன் 2** : காவடி எடுக்கும் பழக்கம் ஏற்பட்டதற்கான காரணம் என்னவென்று தெரியுமா? தமிழர்களின் வாழ்வு தொடங்கிய இடம் குறிஞ்சி, குறிஞ்சி நிலக் கடவுளான முருகனின் வழிபாட்டுத் தலங்கள் மலையிலேயே அமைந்துள்ளன. வழிபாட்டுப் பொருள்களை மலைமீது எடுத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்டதே காவடி, களைப்பு தெரியாமல் இருக்க ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சென்றனர். இதனால் உருவானது காவடியாட்டம்.

**மாணவன் 3** : நம் தமிழர்கள் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனிசியா, ரியூனியன், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்துள்ளனர். அங்கெல்லாம் காவடியாட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. எடுத்துக்காட்டாக, தென்னாப்பிரிக்காவில் கிளோர்ஷ்ட் என்ற இடத்தில் வசிக்கும் தமிழர்கள் சிவசுப்பிரமணியம் என்ற பெயரில் முருகனுக்குக் கோவில் அமைத்து அங்குத் தைப்பூசத்திற்கும் பங்குனி உத்திரத்திற்கும் காவடி எடுக்கிறார்கள்.

**மாணவன் 2** : ஆமாம். இதேபோல் என் மாமா மலேசியால்வில்கூட காவடியாட்டம் விமர்சனையாக நடைபெறுவதாகக் கூறியுள்ளார். மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன்கோயில், கங்கைப் பட்டாணி ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம், பினாங்கு தண்ணீர் மலை ஸ்ரீ பால தண்டாயுதபாணி ஆலயம் எனப் பல பெயர்களில் முருகன் கோவில்கள் உள்ளன. அங்கெல்லாம் காவடி எடுக்கின்றனர். மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன் கோவில் தமிழ்நாட்டின் பழனிமலை போல் விளங்குகிறது.

**மாணவன் 1** : இது மட்டுமா? சுமத்திரா தீவில் மேடான், சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் காவடி ஆட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் நம் தமிழரின் பண்பாட்டை வளர்க்கும் விதமாகவே அவர்கள் வாழும் நாடுகளில் ஆண்டுதோறும் திருவிழாக்களை நடத்துகிறார்கள். கோயில் விழாக்களில் காவடி எடுக்கின்றனர். தற்போதைய வளர்ச்சி நிலையில் இவையெல்லாம் எளிதாக நடைபெறுகிறது.

**மாணவன் 4** : சரியாகச் சொன்னாய். இக்கோயில் திருவிழாக்களில் தமிழகக் கலைஞர்கள் அழைக்கப்படுகிறார்கள். காவடியாட்டம், கரகாட்டம் என நம் பண்பாட்டை நினைவு கூர்ந்து இன்பமடைகிறார்கள். அயல் நாடுகளில் வாழும் மக்கள் பலர் குடும்பத்தை விட்டுத் தனியாக சென்று வாழ்கின்றனர். சிலர் குடும்பமாக உள்ளனர். அவர்கள் அந்நாடுகளிலேயே தங்கி வாழும் உரிமையையும் பெற்றுள்ளனர். திருவிழா என்று ஒன்று ஆரம்பித்ததே மக்களின் சோர்வை நீக்கவும், ஒன்று கூடி மகிழ்வதற்கும்தான். இதனையே அயல்நாட்டில் வாழும் தமிழர்களும் பின்பற்றுகின்றனர். இவ்வாறு திருவிழாக்கள் நிகழும்போது அங்குள்ள தமிழர்கள் ஒன்று சேர்கின்றனர். இவற்றால் அவர்கள் தமிழகத்தில் இல்லை என்ற எண்ணமே இல்லாமல் இருக்கின்றனர்.

**மாணவன் 5** : சரியாகச் சொன்னாய். இன்று காவடி என்றால் என்ன? எங்கெல்லாம் இது நிகழ்த்தப்படுகிறது என்பதை அறிந்து கொண்டோம்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores


இயல் 3

பீடு பெற நில் - பண்பாடு

# வாடிவாசல்

- சி.சு. செல்லப்பா

விரிவானம்

## தெரிந்து தெளிவோம் :

■ **கலித்தொகையில் ஏறுதழுவல் :**

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து
நைவாரா ஆய மகள் தோள். – கலி 103: 63–67

■ அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும்புதினம். இதனைக் **குறுநாவல்** என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

## ஆசிரியர் குறிப்பு :

■ சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.

■ சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்; “எழுத்து” இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

■ **அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள் :** வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ். ராமையாவின் சிறுகதைப் பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.

■ இவருடைய **‘சுதந்திர தாகம்’** புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

## நம்மை அளப்போம்

### நெடுவினா

**1. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. (அ) வாடிவாசல் என்னும் குறும் புதினம் 'தமிழர் பண்பாட்டின் அடையாளம்' என்பதை நிறுவுக.**

அ.மா.வி. காலாண்டுத் தேர்வு 2018,19 ஜூன் 2019, மார்ச் 2020

**முன்னுரை:**

வாடிவாசல் அது துள்ளி ஓடும் காளை மாடுகளின் வாசல். பழங்கால வீரவிளையாட்டான ஏறுதழுவுதலின் போது அதில் கலந்து கொள்ளும் காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும் இடம்தான் வாடிவாசல். அக்காளைகளின் மூக்கணாங்கயிறு மற்றும் காளையை இணைக்கும் கயிறு இவற்றையெல்லாம் அகற்றிவிட்ட பிறகுதான் போட்டிக்கு விடுவர். ‘வாடிவாசல்’ என்ற பெயரில் சி.சு. செல்லப்பா அவர்கள் எழுதியுள்ள நாவலைப் பற்றிக் காண்போம்.

**ஏறுதழுவுதலின் விதிமுறைகள்:**

இவ்விளையாட்டு மனிதர்களுக்கும் காளைக்கும் உள்ள நட்புறவைக் காட்டும். இதில் கலந்து கொள்ளும் காளைகளுக்கு எவ்வித் துன்பத்தையும் கொடுக்கக்கூடாது. மனிதர்களுக்கு இரத்தம் வரலாம். ஆனால் காளைகளுக்கு ஒரு சொட்டு இரத்தம்கூட வரக்கூடாது.

**கதைச் சுருக்கம்:**

வாடிவாசலில் ஜமீன்தாரின் காளையான காரிக்கொம்பு(வாடிபுரம் காளை/கருப்புப் பிசாசு) வெளியே வந்தது. அங்கிருந்த அனைவரின் குரல்களிலும் ஒரு நடுக்கம். அக்காளை பரமசாதுவாக ஆடி அசைந்து வந்தது. மருதன், பிச்சி இருவரும் ஒருவருக்கொருவர் சைகை காட்டிக் கொண்டு காளையை அடக்க முயன்றனர். சிறிது நேரப் போராட்டத்திற்குள் பிச்சி காளையை அடக்கிவிட்டான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. காரணம் ஜமீன்தாரின் காரிக் கொம்பு காளையினால் பிச்சியின் தந்தை இறந்துவிட்டார். தந்தை இறப்பிற்குக் காரணமான காரியை அடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த அவன் அக்காளையை அடக்கி பரிசுப் பொருளைப் பெற்றான்.

**ஏறுதழுவுதலின் போது நிகழும் வர்ணனைகள்:**

“கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்.”
“பய செத்தான்.”





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



ஆ) வாழ்வான் – வாழ் + வ் + ஆன்
வாழ் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

இ) காண்பிப்பார் – காண்பி + ப் + ப் + ஆர்
காண்பி – பகுதி
ப் – சந்தி
ப் – எதிர்கால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

ஈ) பிரிந்த – பிரி + த்(ந்) + த் + அ
பிரி – பகுதி
த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

## கற்பவை கற்றபின்

1. உரைநடைப் பகுதியில் அமைந்துள்ள எவையேனும் பத்துச் சொற்களுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

| | |
|---|---|
| 1. சார்ந்த – சார் + த்(ந்) + த் + அ<br>சார் – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | 6. புரிந்த – புரி + த்(ந்) + த் + அ<br>புரி – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| 2. அமைந்து – அமை + த்(ந்) + த் + உ<br>அமை – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | 7. வருகின்ற – வா(வரு) + கின்று + அ<br>வா – பகுதி 'வரு' எனத் திரிந்தது விகாரம்<br>கின்று – நிகழ்கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| 3. வைத்தார் – வை + த் + த் + ஆர் (காலாண்டுத் தேர்வு 2019)<br>வை – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | 8. ஈன்ற – ஈன் + ற் + அ<br>ஈன் – பகுதி<br>ற் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| 4. அலர்ந்து – அலர் + த்(ந்) + த் + உ<br>அலர் – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | 9. அசைந்த – அசை + த்(ந்) + த் + அ<br>அசை – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |
| 5. முடித்தார் – முடி + த் + த் + ஆர்<br>முடி – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | 10. கேட்டார் – கேள்(ட்) + ட் + ட் + ஆர்<br>கேள் – பகுதி 'ள்' 'ட்' ஆனது விகாரம்<br>ட் – இறந்தகால இடைநிலை<br>ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

செய்யுள்

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| பெயர் | : திருவள்ளுவர் |
| பெற்றோர் | : ஆதி, பகவன் |
| மனைவி | : வாசுகி |
| ஊர் | : மயிலை |
| காலம் | : கி.மு. 31-ம் நூற்றாண்டு |
| சிறப்புப் பெயர்கள் | : தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர். |

**பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்:**

(i) சங்க இலக்கிய நூல்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண் மேற்கணக்கு நூல்களாகும்.

(ii) சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களின் தொகுதிதான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

(iii) "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுங் கோவை பழமொழி – மாமூலம்
இன்னிலை சொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

(iv) மூன்று பொருள்களையும் குறைந்த அடிகளில் (நான்கடிக்கு மிகாமல்) உரைப்பது கீழ்க்கணக்கு நூல்களின் இயல்பாகும்.

**நீதி நூல்கள்:**

பதினெட்டு நூல்களில் பதினொரு நூல்கள் நீதியைப் பற்றிக் கூறுகின்றன. அவையாவன:

| | | |
|---|---|---|
| 1. திருக்குறள் | 5. இன்னா நாற்பது | 9. பழமொழி |
| 2. நாலடியார் | 6. திரிகடுகம் | 10. முதுமொழிக்காஞ்சி |
| 3. நான்மணிக்கடிகை | 7. ஆசாரக் கோவை | 11. ஏலாதி |
| 4. இனியவை நாற்பது | 8. சிறுபஞ்ச மூலம் | |

**உலகப் பொதுமறை:**

(i) உலகப் பொதுமறை என்னும் ஒப்பற்ற சிறப்பினையுடையது திருக்குறளாகும்.

(ii) தனி மனிதனின் வாழ்வின் மேன்மையைக் குறிப்பது அறத்துப்பால்.

(iii) சமுதாய வாழ்வினைச் சுட்டிக் காட்டுவது பொருட்பால்.

(iv) அக வாழ்வின் மேன்மையைச் சிறப்பித்துக்காட்டுவது இன்பத்துப்பால்.

(v) சொல்லழகும் பொருளழகும் கருத்தழகும் மிக்க ஒப்பற்ற நூல் உலகப் பொதுமறையாம் திருக்குறளே.

**இந்நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டது அவை :**

1. **அறத்துப்பால்** : இயல்-4, 38 அதிகாரம், பாயிரவியல் - 04, இல்லறவியல் - 20, துறவறவியல் - 13, ஊழியல் -01.
2. **பொருட்பால்** : இயல் 3 - 70 அதிகாரம், அரசு இயல் -25, அமைச்சு இயல் - 32, ஒழிபியல் - 13,
3. **இன்பத்துப்பால்** : இயல் 2 - 25 அதிகாரம், களவியல்- 07, கற்பியல் -18.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கற்பவை கற்றபின்

1. **படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**விடை: இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது**

2. **துன்பப்படுபவர் ________________**

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**விடை: ஈ) நாவைக் காக்காதவர்**

3. **பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் – நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**விடை: ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.**

4. **கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழுங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும் ...
ஆசை அறுத்தல் எளிதல்ல!
முயன்று பார்க்கலாம் வா!

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores


(iv) சென்னை மாகாணத்தில் 12,498 திண்ணைப்பள்ளிகள் இயங்கி வந்தன என்றும் அவற்றின் கல்வித்தரம் பல ஐரோப்பிய நாடுகளின் அப்போதைய கல்வித்தரத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவே காணப்பட்டது என்றும் **தாமஸ் மன்றோ** காலத்தில் நடத்திய ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உயர்நிலைக்கல்வி :** தனி நிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமைக்குள் இக்கல்விமுறை விளங்கும். திருவாவடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப் புலவராக விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதர் இம்முறையில் பாடம் பயின்றார்.

**முடிவுரை :** மேற்கண்ட கட்டுரையின் மூலம் பௌத்த, சமணக் கல்வி, மரபு வழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை அறிந்தோம்.

## கற்பவை கற்றபின்

1. **தமிழகத்தின் பண்டைக் கல்விமுறைகள் குறித்துச் செய்திப்படக் கட்டுரை ஏடு ஒன்றை உருவாக்குக.**

**குருகுல கல்விமுறை :**



பழங்காலத்தில் கல்வி கற்றுத் தரும் குருவின் ஆசிரமத்தில் மாணவர்கள் தங்கி குருவிற்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து கொண்டே குருவின் அருகிலேயே இருந்து கல்வி பயிலும் இடம் குருகுலக் கல்வி எனப்பட்டது. செய்து கற்றல், வாழ்ந்து கற்றல் எளிமையாக வாழ்தல் என்ற அடிப்படையில் இக்குருகுலக் கல்வி முறை அமைந்திருந்தது. இங்கு வாய்மொழியாகவே பாடங்கள் கற்றுத் தரப்பட்டது. மாணவர்கள் குருவின் ஆசிரமத்திற்குத் தேவையான அனைத்து வேலைகளைச் செய்து கொண்டே கல்வி கற்க வேண்டும். இங்குக் கல்வி பயிலும் காலம் குறைந்த பட்சம் 12 ஆண்டுகளாகும்.

இங்குக் கற்பிக்கப்பட்ட பாடங்கள் – வேதங்கள், உபவேதங்கள், யோகா, தர்க்கம், அரசியல், அரச தந்திரம், இதிகாசம், புராணம், சோதிடம், வானியல், ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பொது அறிவு.

**திண்ணைப் பள்ளிக்கூடங்கள் :**

கிராமத்துப் பள்ளிக்கூடங்கள் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எனவும் அழைக்கப்பட்டன. இங்குப் பாடம் கற்பிப்பவர் உபாத்தியாயர் என்றும் கணக்காயர் என்றும் அழைக்கப்பட்டார். இக்கல்விமுறை கொஞ்சம் வேறுபட்டது. மாணவர்கள் விடியற்காலையில் ஐந்து மணிக்கே எழுந்து சுவடித் தூக்கோடு பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட வேண்டும். சுவடித் தூக்கு என்பது சுவடிகளையெல்லாம் வைத்துத் தூக்கிச் செல்லும் கயிறுகள் சேர்ந்த பலகையாகும். அந்தத் தூக்கு ஒரு வகை உறியைப்போல் இருக்கும். மாணவர்கள் அதனைத் திண்ணையில் ஓர் ஓரமாய் மாட்டிவிட்டுத் திண்ணையில் அமர்ந்து, முதல்நாள் பாடங்களைப் பாராமல் சொல்ல வேண்டும். இதற்குப் பெயர் முறை சொல்லுதல் என்பதாகும். இதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் மாணவர்கள் சொல்லும் போது அங்கு ஆசிரியர் எதிரில் இருக்கமாட்டார். உள்ளே படுத்துக் கொண்டிருப்பர், அல்லது வேறு ஏதேனும் வேலை செய்து கொண்டே கவனிப்பார். ஆறு மணிக்கு மேல் பிள்ளைகளெல்லாம் வாய்க்கால் அல்லது குளத்திற்குச் சென்று நீராடி விட்டுத் தங்கள் குலத்திற்கேற்ற சின்னங்களைத் தரித்துக் கொண்டு இறைவனை வழிபடுபவார்கள். பிறகு தங்கள் ஆடைகளில் மணலை எடுத்துக் கொண்டு மூஷிக வாகனம், ஸ்ரஸ்வதி ஸ்தோத்திரம் முதலியவற்றைச் சொல்லிக் கொண்டே வருவார்கள். முன்பிருந்த பழைய மணலை அகற்றிவிட்டுப் புதிய மணலைப் பரப்புவார்கள். ஒன்பது மணிக்குப் பழைய சோறு சாப்பிடுவார்கள். பிறகு பாடம் கற்றுக் கொடுக்கப்படும். மாணக்கர்களுக்குள் பழையவர்கள் புதியவர்களுக்குக் கற்பிப்பதும் பள்ளிக்கூட வழக்கங்களில் ஒன்று. மூத்த மாணவர் சட்டாம்பிள்ளை எனப்பட்டார். மத்தியான உணவிற்குப் பன்னிரண்டு மணிக்குச் சென்று மீண்டும் மூன்று மணிக்கு வருவார்கள். இரவு ஏழு மணி வரையில் பள்ளிக்கூடம் நடைபெறும்.

**சமண, பௌத்தப் பள்ளிகள் :**

சமணத் துறவிகள் தங்கி இருந்த இடங்கள் பள்ளிகள் எனப்பட்டன. அவ்வாறு தாங்கள் தங்கித் தவமிருக்கும் குகைகள், மலையிடங்களை நாடி வரும் மாணவர்களுக்குக் கல்வியளித்தனர். குகைகளை ஒட்டி அமைக்கப்பட்ட


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**முடிவுரை :**

'தாய்மொழியிலே பயின்று
யாதும் ஊரென
உலகின் உறவாகவே
விரும்புகிறேன் நான்' என்கிறார் கவிஞர்.

☆☆☆

இயல் 4 — கேடில் விழுச்செல்வம் - கல்வி

# நற்றிணை

- போதனார் — கவிதைப்பேழை

**பாடல்**

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்தற்று**
**அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்**
**பரீஇ மெலிந்தொழியப் பந்தர் ஓடி**
**ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே.** (110)

– போதனார்

**பொருளுரை :**

"நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலித்தாயார் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தலின் கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ, 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள்.

செவிலித்தாயார் அவளைப் பின் தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பார். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண், நம் மகள், இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல் ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?"

**திணை** : பாலை

**துறை** : மகள் நிலை உரைத்தல்

**கூற்று** : தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

**கூற்று விளக்கம்** : திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்று வந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.

**துறை விளக்கம்** : "மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை **"மனை மருட்சி"** என்றும் கூறப்படும்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

இயல் 4

கேடில் விழுச்செல்வம் - கல்வி

# இதழாளர் பாரதி

விரிவானம்

**தெரிந்து தெளிவோம் :**

- எந்த விஷயமும் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தைச் சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது. – பாரதியார் கட்டுரைகள்
- இறந்து போவதற்கு முதல்நாள் இரவு, தூங்கச் செல்லும் முன்பு, நாளைக்கு, "அமானுல்லா கானைப் பற்றி ஒரு வியாசம் எழுதி ஆபிசுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டும்" என்று இறுதியாகப் பாரதியார் கூறியுள்ளார்.
– 'பாரதியைப் பற்றி நண்பர்கள்', ரா.அ.பத்மநாபன்

## நம்மை அளப்போம்

**நெடுவினா**

**1. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?** மார்ச், காலாண்டுத் தேர்வு 2019

**முன்னுரை :**

கல்வி என்பது பள்ளி அல்லது கல்லூரியில் மட்டும் பெறப்படுவதன்று. கல்வி கற்பவர் இதழ்களிலும் நடைமுறை அறிவைப் பெறுவதுடன் அதற்கேற்ப வாழவும் முனைகின்றனர். இவ்விதழ்களின் ஆசிரியர்கள் சமூகத்திற்குத் தேவையான பாடங்களை முன் வைக்கின்றனர். சிறந்த பத்திரிகையாளன் 'நல்ல ஆசான்' என்பதில் ஐயமில்லை பாரதியும் இதற்கு விலக்கன்று. செம்மொழியாகத் திகழும் நம் மொழி புதிய நடையும், புதிய உடையும் புதிய பொருளும் கொண்டு எழுச்சியுடன் திகழக் காரணமாக அமைந்த தமிழ்ச்சிற்பி பாரதியின் இதழியல் பணிப் பற்றி இங்கு ஆய்வோம்.

**மகாகவி என்ற பேரொளியில் பாரதியின் பல பரிமாணங்கள் :**

(i) பாரதி கவிஞர் மட்டுமல்லர், சிறந்த பேச்சாளர், பாடகர், கட்டுரையாளர், கதை ஆசிரியர், மொழி பெயர்ப்பாளர், அரசியல் அறிஞர், ஆன்மீகவாதி இவை அனைத்திற்கும் மேலாக மிகச்சிறந்த இதழாளர். எட்டையபுரம் சமஸ்தானத்தின் பணிக்கட்டுப் பாட்டிலிருந்து வெளியேறிய பாரதி, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார்.

(ii) பாரதியின் உலகளாவிய பார்வை கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டு கோலாக இருந்திருக்க வேண்டும். சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி ( யங் இந்தியா), விஜயா, சூர்யோதயம், கர்மயோகி ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பணியாற்றினார்

(iii) சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களிலும் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

(iv) ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி இளசை சுப்ரமணியன், சாவித்திரி, சி. சு. பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தமர் தேசாபிமானி, ஷெல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், ரிஷி குமாரன், காசி, சரஸ்வதி, பிரஞ்சுக்காளிதாசன், செல்லம்மா, கிருஷ்ணன் எனப் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

(v) கருத்துடன் காட்சியும் இடம்பெறுவது வாசகர்களைக் கவரும் என்பதனை உணர்ந்த பாரதி அன்றே தாம் பணியாற்றிய இதழ்களில் கருத்துப் படங்களையும் கேலிச்சித்திரங்களையும் வெளியிட்டுள்ளார். தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதியார்தான். லண்டன் பஞ்ச், இந்தி பஞ்ச் முதலிய கருத்துப் படங்களைக் கொண்ட இதழ்களைப் பார்த்த பாரதி, தமிழில் 'சித்திராவளி' என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டும் கொண்ட இதழ் ஒன்றையும் நடத்த விரும்பினார்.

(vi) ஆங்கில கலப்பின்றித் தமிழில் பேசுவதையே வியப்பாகப் பார்ப்பவர்களுக்கு இடையில் தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாகக் குறித்தவர் பாரதி.

(vii) பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது 'சக்ரவர்த்தினி' இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார். அக்குறள்,

www.surabooks.com

| | | | |
|---|---|---|---|
| Religion | - மதம் | Medicine | - மருத்துவம் |
| Philosophy | - தத்துவம் | Science | - அறிவியல் |
| Idols | - சிலைகள் | | |

## உருவகங்களை உவமைகளாக மாற்றுக.

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.**

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கி வைக்கப்படாத புத்தகங்களைப்போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப்போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டு கொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின்மேல் சாய்ந்தபடி அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

**விடை:**

| உருவகம் | உவமை |
|---|---|
| விழிச்சுடர்<br>எண்ணவலை<br>பசிக்கயிறு | மின்னல்களைப் போன்ற சொற்கள்.<br>அடுக்கி வைக்கப்படாத புத்தகங்களைப் போல குழம்பிய எண்ணங்கள்.<br>நத்தையைப் போல மெதுவாக நகர்தல்.<br>நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம்.<br>பூனைக்குட்டியைப் போல சுருண்டு கொள்ளுதல்.<br>பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப் போல அம்மாவின் கதகதப்பு. |

**உருவகங்களை உவமையாக மாற்றுதல் :**

| உருவகம் | உவமை |
|---|---|
| 1. விழிச்சுடர் | சுடர்விழி |
| 2. எண்ணவலை | வலையெண்ணம் |
| 3. பசிக்கயிறு | கயிற்றுப் பசி |

**உவமைகளின் வகை :**

| உவமைத் தொடர்கள் | வகை |
|---|---|
| மின்னல்களைப் போன்ற சொற்கள் | வினை உவமை |
| அடுக்கி வைக்கப்படாத புத்தகங்களைப் போல குழம்பிய எண்ணங்கள் | பயன் உவமை |
| நத்தையைப் போல மெதுவாக நகர்தல் | வினை உவமை |
| நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் | உரு உவமை |
| பூனைக்குட்டியைப் போல சுருண்டு கொள்ளல் | வடிவ உவமை |
| பூனைக்குட்டியை மடியில் வைத்துக் கொண்டதைப் போல் அம்மாவின் கதகதப்பு | பயன் உவமை |

## கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.

கல்வி என்றால் என்ன? அது நூல்களைப் படிப்பதா? அல்லது அது பலவகையானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின்மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

கேட்டல் விழுச்செல்வம்

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



# ஆனந்தரங்கர் நாட்குறிப்பு



## தெரிந்து தெளிவோம் :

- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் **சாமுவேல் பெப்பிசு** ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் 'இரண்டாம் சார்லஸ்' மன்னர் காலத்து நிகழ்வுகளை **(1660 – 1669)** நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் **06.09.1736** முதல் **11.01.1761** வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் **இந்தியாவின் பெப்பிசு** என்று அழைக்கப்படுகிறார்.
- **ஆனந்தரங்கரைப் பற்றி வ.வே.சு கூற்று :** அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது. முக்கியமில்லாதது என்றுகூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்.
- **ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ.வே.சா :** தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.
- **ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள் :**

| | |
|---|---|
| 480 காசு | ஒரு ரூபாய் |
| 60 காசு | 1 பணம் |
| 8 பணம் | 1 ரூபாய் |
| 24 பணம் | ஒரு வராகன் |
| 1 பொன் | ½ வராகன் |
| 1 வராகன் | 3 அல்லது 3.2 ரூபாய் |
| 1 மோகரி | 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்கநாணயம் |

- **ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில :**
  1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
  2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
  3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்.
- புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது. அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

**(தொகுதி 11 பக்க. 81–84)**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 5

நாளெல்லாம் வினைசெய் - நாகரிகம், தொழில், வணிகம்

# சீறாப்புராணம்

- உமறுப்புலவர்

கவிதைப்பேழை

**ஹிஜிறத்துக்காண்டம் - மதீனம்புக்க படலம் :**

ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கும் **இடம் பெயர்தல்** என்பது பொருள். மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள். நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு மதீனாவிற்கு வரவேண்டுமென்று மதீனா மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான அபூபக்கர் முதலானோருடன், முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார். அந்நகரினைக் காப்பிய இலக்கண நெறி நின்று **உமறுப்புலவர்** புகழ்ந்து பாடியுள்ளார்.

**பாடல்**

**மாளிகை நகரம்**

**வடவரை பொருவென மலிந்த மேனிலைக்**
**கடலென ஒலித்ததா வணத்தின் கம்பலைப்**
**புடவியை அளந்தன போன்று வீதிகள்**
**இடனற நெருங்கின மாடம் எங்குமே**

**பொருளுரை :**

மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன் மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப் போன்று பரந்திருந்தன, அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

**பாடல்**

**கொடை நகரம்**

**கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)**
**இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்**
**மலைவிலா(து) அருளிய வள்ளி யோரினும்**
**தொலைவிலாப் பெரும்புகழ் படைத்த தொன்னகர்**

**பொருளுரை :**

பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையன்று சொல்வதற்கு இல்லை. அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரிவழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப்பெற்றது மதீனா நகரம்.

**பாடல்**

**பொன்னகரம்**

**தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்**
**வாரண மதமலை மலிந்து நிற்றலால்**
**காரணத் தொடும்வர வாறு காணலால்**
**பூரணப் புவியெனப் பொலிந்த பொன்னகர்**

**பொருளுரை :**

கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடு போல நெருங்கியிருந்தன. மலை போன்ற யானைகள அவ்விடத்தில் நிறைந்திருக்கின்றன. வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன. இவற்றால் முழுமை பெற்ற பூமியைப் போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.

**பாடல்**

**மனைநகரம்**

**சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்**
**புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால்**
**எதிர்பணிந்(து) இடுவிருந்து இனிதின் நல்கலால்**
**வதுவையின் மனையென இருந்த மாநகர்.**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## அரசு தேர்வு வினா - விடைகள்

1. முதலடியும் இறுதி அடியும் அளவடிகளாகவும் இடையடிகள் குறளடி சிந்தடியாகவும் வரும் ஆசிரியப்பா (அ.மா.வி 2018)

அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா
இ) இணைக்குறள் ஆசிரியப்பா ஈ) அடிமறிமண்டல ஆசிரியப்பா

**விடை: இ) இணைக்குறள் ஆசிரியப்பா**

2. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் : (மார்ச் 2019)

அ) வெண்சீர் ஆ) கனிச்சீர் இ) ஆசிரிய உரிச்சீர் ஈ) வஞ்சியுரிச்சீர்

**விடை: இ) ஆசிரிய உரிச்சீர்**

3. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை (அரையாண்டுத் தேர்வு 2019)

அ) செப்பலோசை ஆ) அகவலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

**விடை: ஆ) அகவலோசை**

## கூடுதல் வினாக்கள்

### குறுவினா

1. **யாப்பு என்பதன் விளக்கம் எழுதுக.**

யாப்பு என்பதன் பொருள் கட்டுதல் என்பதாகும். செய்யுள் யாக்கின்ற (கட்டுகின்ற) காரணத்தினால் அதைப்பற்றிக் கூறும் இலக்கணம் யாப்பு என்றும் கூறுவர். பா, செய்யுள், தூக்கு, பாட்டு ஆகிய சொற்கள் ஒரே பொருளில் வருவன.

2. **செய்யுள் உறுப்புகள் என்பதன் விளக்கம் யாது?**

செய்யுள் இயற்றுவதற்குப் பயன்படும் உறுப்புக்கள் செய்யுளுறுப்புகள் எனப்படும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் ஆகியன செய்யுள் உறுப்புகளாகும்.

3. **யாப்பருங்கலக்காரிகை குறிப்பு எழுதுக.**

பாக்களின் வகைகள், அப்பாக்களின் ஓசைகள், பாக்கள் இயற்றுவதற்குரிய விதிமுறைகள் முதலியவற்றை வெளிப்படுத்துவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும். இது யாப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் நூலாக உள்ளது.

4. **தமிழ்ச் செய்யுள் வடிவங்களைக் கூறுக.**

தமிழ்ச் செய்யுள் வடிவங்கள் பெரும்பாலும் இசையை அடிப்படையாகக் கொண்டவை. ஓசையே தமிழ்ச் செய்யுளை மெருகேற்றும். இவ்வோசை செய்யுளுக்கு மேலும் அழகு சேர்க்கிறது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாவகைகள் முறையே செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்னும் ஓசை வடிவம் கொண்டவை.

5. **கவிதை வடிவம் – வரையறை.**

செய்யுளில் மோனை, எதுகை, இயைபு போன்றவை இசையைப் பிணைக்கின்றன. சீர் அடிப்படையில் அடிகள் வரையறை செய்யப்படுகின்றன. குறளடி இரண்டு சீர்களாகவும், சிந்தடி மூன்று சீர்களாகவும், அளவடி அல்லது நேரடி நான்கு சீர்களாகவும், நெடிலடி ஐந்து சீர்களாகவும் கழி நெடிலடி ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களாகவும் வருவதே கவிதையின் வடிவமாகும்.

6. **சங்க காலத்தில் தமிழில் மிகுதியாக இருந்த பாவகை எது?**

பா இயற்றுவதற்குரிய எளிய வடிவமாக ஆசிரியப்பாவைக் கூறலாம். அகவல் ஓசை பெற்றதால் ஆசிரியப்பாவை 'அகவற்பா' என்றும் கூறுவர். பெரும்பாலும் ஆசிரியப்பா இரண்டு அசைகளால் அமையும். ஆசிரியப்பாக்களால் ஆன பாடல்களே சங்க காலத் தமிழில் மிகுதியாக உள்ளன.

☆☆☆

நாளெல்லாம் வினைசெய்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in



## நிற்க அதற்குத் தக

| நாகரிகம் | கடைப்பிடிப்போம் |
|---|---|
| கலைவாணன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறான். கடைக்குச் சென்ற அவன் தாத்தா பை நிறைய பொருள்களைத் தூக்கிக்கொண்டு வருகிறார். சுமை தாங்காது உதவிக்கு அழைக்கிறார். தொலைக்காட்சியில் வைத்தகண் வாங்காமல் நிகழ்ச்சியொன்றினைப் பார்த்துக்கொண்டிருக்கும் அவன் என்ன செய்ய வேண்டும்? | ஓடோடி வர வேண்டும். சுமை தாங்காது உதவிக்கு அழைக்கும் தாத்தாவின் கையில் இருக்கும் பொருட்கள் அடங்கிய பையை உடனே வாங்கிக் கொள்ள வேண்டும். உதவும் மனப்பான்மையும், பொறுப்புணர்வும் மாணவப் பருவத்தில் இருக்க வேண்டும் என்பதனை உணர்த்தவே இந்த நிகழ்வு. |
| உங்களது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்திருக்கிறார். முன்னறிவிப்பின்றி வந்திருக்கும் அவர் மிகவும் களைப்புடன் காணப்படுகின்றார். நீங்கள் அவரை எவ்விதம் வரவேற்பீர்கள்? | களைப்பு நீங்க முதலில் குடிக்கத் தண்ணீர் கொடுப்பேன். பிறகு உண்ண உணவு கொடுத்து உபசரிப்பேன். களைப்பு முற்றிலும் நீங்க வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்து தருவேன். இன்முகத்துடன் வரவேற்று உபசரணை செய்வேன். |

### கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. ஆவணம் – Document<br>மார்ச், அரையாண்டுத் தேர்வு 2019 | 4. படையெடுப்பு – Invasion |
| 2. உப்பங்கழி – Backwater | 5. பண்பாடு – Culture |
| 3. ஒப்பந்தம் – Agreement<br>அரையாண்டுத் தேர்வு 2019 | 6. மாலுமி – Sailor<br>மார்ச் 2020 |

### அறிவை விரிவு செய்

1. மறைக்கப்பட்ட இந்தியா – எஸ்.இராமாகிருஷ்ணன்
2. பிரபஞ்சன் சிறுகதைகள்

☆☆☆

## கணப்பொழுதில் ஒரு விரைவுப் பார்வை: 1 மதிப்பெண் வினா-விடைகள்

1. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்? **டைரி**
2. டைரியம் என்னும் இலத்தீன் சொல்லின் மூலம் எது? **குறைசி இன மக்கள்**
3. முகலாய மன்னர்களில் யாருடைய காலம் முதல் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இருந்தது? **பாபர்**
4. நாட்குறிப்பு எழுதும் பழக்கமுள்ள போர்ச்சுக்கீசிய மாலுமி **வாஸ்கோடகாமா**
5. ஆனந்தரங்கர் வாழ்ந்த நூற்றாண்டு எது? **18ஆம் நூற்றாண்டு**
6. யாருடைய ஆட்சிக்காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டிருந்தது **ஔரங்கசீப்**
7. வாஸ்கோடகாமாவின் நாட்குறிப்புகளைப் பதிவு செய்தவர் **ஆல்வர்ரோ வெல்லோ**
8. 1498இல் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குக் கடல் வழியைக் கண்டுபிடித்த போர்ச்சுக்கீசிய மாலுமி **வாஸ்கோடகாமா**





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

39. வெண்பாவுக்குரிய ஓசை வடிவம் **செப்பலோசை**

40. ஆசிரியப்பாவுக்குரிய ஓசை வடிவம் **அகலலோசை**

41. கலிப்பாவிற்குரிய ஓசை **துள்ளலோசை**

42. வஞ்சிப்பா பெற்று வரும் ஓசை **தூங்கலோசை**

43. இரண்டு சீர்களைக் கொண்டது **குறளடி**

44. மூன்று சீர்களைக் கொண்டது **சிந்தடி** காலாண்டுத் தேர்வு 2019

45. நான்கு சீர்களைக் கொண்டது **அளவடி**

46. ஐந்து சீர்களுடன் வருவது **நெடிலடி**

47. அகற்பா என்றழைக்கப்படுவது **ஆசிரியப்பா**

48. சங்ககாலத் தமிழில் எப்பாக்களால் ஆன பாடல்கள் மிகுதியாக உள்ளன? **ஆசிரியப்பா**

49. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர் **இயற்சீர்**

50. மாமுன் நேர் ஒன்றி வருவது **நேரொன்றாசிரியத்தளை**

51. விளம்முன் நிரை ஒன்றி வருவது **நிரையொன்றாசிரியத்தளை**

☆☆☆

இயல் 5 வாழ்வியல்

# திருக்குறள்

செய்யுள்

## பொச்சாவாமை

1. **இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.** குறள் -539

**தெளிவுரை** : தாம் தம் மகிழ்ச்சியால் செருக்குக் கொண்டு கடமையை மறந்திருக்கும்போது, அவ்வாறு சோர்ந்திருந்த காரணத்தால் முற்காலத்தில் அழிந்த வரை நினைக்க வேண்டும்.

**விளக்கவுரை** : செல்வத்தால் செருக்கடையும் போது மறதியால் கெட்டுப் போன வரை எண்ணிப் பார்க்க வேண்டும். கெட்டாரே நினைக்கவே தமக்கும் வருங்கேட்டிற் கஞ்சித் திருந்துவர் என்பது கருத்து. திருந்துதல் மறவாது கடமையைச் செய்தல். 'இகழ்ச்சியிற் கெட்டாவரை எண்ணுக' என்று பாடம் ஓதுவர் மணக்குடவர்.

**சொல்லும் பொருளும்**

1. தாம்தம் மகிழ்ச்சியின் – தாம் தமது மகிழ்ச்சியினால்
2. மைந்து உறும்போது – கர்வங்கொள்ளும் போது
3. இகழ்ச்சியின் – மறதியினால்
4. கெட்டாரை – கெட்டுப் போனவர்களை
5. உள்ளுக – நினைத்துக் கொள்ள வேண்டும்

2. **உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.** குறள் -540

**தெளிவுரை** : ஒருவன் தான் அடைய விரும்பியதை மனச் சோர்வு இல்லாமல் எண்ணிச் செயல்படக் கூடுமானால் அவன் எண்ணியதை எண்ணியவாறு அடைவது எளிது.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net This is only for Sample www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores

இயல் 6

பல்கலை நிறுவு - கலை, அழகியல், புதுமைகள்

# காலத்தை வென்ற கலை

உரைநடை உலகம்

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார். மார்ச் 2019
கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **விடை: ஈ) கூற்று இரண்டும் சரி**

### குறுவினா

1. **இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?** மார்ச் 2019

இந்திய கட்டடக் கலைப்பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்று வகையாக பிரிப்பர்.

2. **ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**

(i) இராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் அரசுப் பணிகளில் இருந்திருக்கிறார்கள். ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில், 'எருதந் குஞ்சர மல்லி' என்ற பெண் அதிகாரியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) அதே கோவிலில் முதலாம் இராசாதிராசன் காலத்திலும் ஓர் அதிகாரச்சி பற்றிய குறிப்பு இருக்கிறது. அவர் பெயர் சோமயன் அமிர்தவல்லி.

(iii) இவற்றின் மூலம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர் என்பது அறியப்படுகிறது.

### சிறுவினா

1. **ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோயில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?** அரையாண்டுத் தேர்வு 2019 மார்ச் 2020

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள் :**

(i) ஃப்ரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்.

(ii) சுண்ணாம்புக் காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது.

(iii) தஞ்சை பெரிய கோவில் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகை பகுதிச் சுவர்கள், அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் ஃபிரெஸ்கோ ஓவியங்களைக் காணலாம்.

**கற்றளிக்கோயில்கள்:** மார்ச் 2020

(i) செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் 'கற்றளி' என்று பெயர். இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது.

(ii) மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

(iii) அந்த வகையில் முழுமையாகக் கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோவில் இதுதான்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**13. சோழர் காலத்துப் பெண் அதிகாரிகள் யாவர்?**

சோழர் காலத்துப் பெண் அதிகாரிகள் :

(i) எருதந் குஞ்சர மல்லி

(ii) சோமயன் அமிர்தவல்லி

**14. கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருந்த கல்தச்சர்களின் பெயர்களை எழுதுக.**

வீரசோழன் குஞ்சரமல்லன் இராசராசப் பெருந்தச்சன், மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன், இலத்தி சடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன் ஆகிய பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

## சிறுவினா

**1. அக்காலத்தில் கோவில்கள் பெரிதாக கட்டப்பட காரணம் யாது?**

(i) கோவில் என்பது வெறும் வழிபடும் தலமாக மட்டுமல்லாது அங்கே இசை, நடனம், நாடகம் போன்ற அருங்கலைகள் வளர்க்குமிடமாகச் செயல்பட்டன. அது மக்கள் ஒன்று கூடும் இடமாகவும் இருந்தது. மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகள் யாவும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டன.

(ii) பஞ்சகாலத்தில் மக்களுக்கு உதவுவதற்கான தானியக் கிடங்குகளும் கோவிலுக்குள் அமைக்கப்பட்டிருந்தன.

(iii) கோவில்கள் கருவூலமாகவும், மருத்துவமனையாகவும் போர்க்காலங்களில் படைவீரர்கள் தங்கக் கூடிய இடமாகவும் பயன்படுத்தப்பட்டதால் கோவில்கள் பெரிதாகக் கட்டப்பட்டு இருந்தன.

☆ ☆ ☆



இயல் 6

பல்கலை நிறுவு - கலை, அழகியல், புதுமைகள்

# ஆத்மாநாம் கவிதைகள்

- ஆத்மாநாம்

கவிதைப்பேழை

| பாடல் | |
|---|---|
| கேள்வி | புளியமரம் |
| காலை எழுந்ததும்<br>இரை தேடத் துள்ளும்<br>இவ்வணில்<br>இரவு எங்கே உறங்குகிறது<br>மலர்க்கிளைப் படுகையிலா<br>ஆற்றுமணற் சரிவிலா<br>சதுர வட்டக் கோண மயக்கச் சந்து பொந்துகளிலா<br>நிச்சயம் நூற்றுக்கணக்கில் இருக்கும்<br>இவ்வணில்கள்<br>ஒன்றல்ல தம் குழந்தைத்தனமான முகங்களுடன்<br>சிறு பிள்ளைக்கைகளுடன்<br>அனுபவித்து உண்ணும்<br>இவை<br>தங்களைப்பற்றி என்ன கனவு காணும்<br>உணவையும் உறக்கத்தையும் தவிர.  | ஒரு புளியமரம் சமீபத்தில்<br>என் நண்பனாயிற்று<br>தற்செயலாய்<br>அப்புறம் நான் சென்றபோது<br>நிழலிலிருந்து ஒரு குரல்<br>என்னைத் தெரிகிறதா<br>நினைவிருக்கிறதா<br>அன்றொரு நாள்<br>நீ புளியம்பழங்கள்<br>பொறுக்க வந்தபோது<br>என் தமக்கையின் மடியில்<br>அயர்ந்து போனாய்<br>அப்போது குளிர்ந்த காற்றை வீசினேனே<br>உன் முகத்தில் உடலில் எங்கும்<br>வா எப்படியும் என் மடிக்கு.  |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 6

பல்கலை நிறுவு - கலை, அழகியல், புதுமைகள்

# திருச்சாழல்

- மாணிக்கவாசகர் கவிதைப்பேழை

பாடல்

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தானியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 1

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 2

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 3

– மாணிக்கவாசகர்

**பொருளுரை :**

**பெண் 1** : சுடுகாட்டைக் கோயிலாகவும் புலித்தோலை ஆடையாகவும் கொண்ட உங்கள் தலைவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. இத்தன்மையனோ உங்கள் கடவுள்?

**பெண் 2** : எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லாவிடினும் அவன் சினந்தால் உலகம் அனைத்தும் கற்பொடியாகிவிடும்.

**பெண் 1** : அக்காலத்தில் பாற்கடலைக் கடைந்தபோது உண்டாகிய நஞ்சை, சிவன் உண்டான். அதற்குக் காரணம் யாதோ?

**பெண் 2** : அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால் பிரமன், விஷ்ணு உள்ளிட்ட தேவர்கள் அன்றே அழிந்து ஒழிந்திருப்பார்கள்.

**பெண் 1** : தான் முடிவு இல்லாதவனாக இருந்தும் அவனை அடைந்த என்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்தானே, இது என்ன புதுமை?

**பெண் 2** : உன்னை ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்த திருவடிகள் தேவர்களுக்கும் மேன்மையான பொருளாகும்.

**சொல்லும் பொருளும் :**

1. காயில் – வெகுண்டால்
2. அயன் – பிரமன்
3. மால் – விஷ்ணு
4. ஆலாலம் – நஞ்சு
5. அந்தம் – முடிவு

**நூற்குறிப்பு :**

- திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்.
- இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- இது சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது.
- திருவாசகத்தில் 51 திருப்பதிகங்கள் உள்ளன.

பல்கலை நிறுவு



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 6 பல்கலை நிறுவு - கலை, அழகியல், புதுமைகள்

# கலைச்சொல்லாக்கம்

இனிக்கும் இலக்கணம்

**தெரிந்து தெளிவோம் :**

- ஒரு சொல்லை மொழிபெயர்க்கும்போதோ அல்லது புதிய சொல்லை உருவாக்கும்போதோ அச்சொல் அதே போன்ற வேறு பல சொற்களை உருவாக்க உதவ வேண்டும். எடுத்துக்காட்டாக, library என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நூலகம், நூல்நிலையம் ஆகிய சொற்கள் கையாளப்படுகின்றன. இச்சொற்களில் நூலகம் என்னும் சொல்லே மேலும் பல சொற்களை உருவாக்கும் ஆக்கத்திறன் கொண்டது.

  library - நூலகம், librarian - நூலகர், ibrary science - நூலக இயல்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. கலைச் சொல்லாக்கம் – பொருள் தருக.** ஜூன் 2019

கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் சொற்களை உருவாக்கிக் கொள்ளும் முறைக்குக் கலைச்சொல்லாக்கம் என்று பெயர். புதிய புதிய சொற்களை உருவாக்குதலே கலைச்சொல்லாக்கம் ஆகும்.

**2. கலைச் சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்குரிய விதிமுறைகள் யாவை?** அ.மா.வி 2018

தமிழில் கலைச்சொல்லாக்கப் பணி தொடங்குவதற்கு முன் நாம் பின்வரும் விதிமுறைகள் சிலவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆக்கப்பெறும் சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும். பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும். வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும். சொல்லோசை நயமாக இருத்தல் வேண்டும். தமிழிலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நல்லவை அல்லாதவற்றைக் குறிக்கக் கூடாது.

**3. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.**

(i) Personality – ஆளுமை
(ii) Emotion – உணர்ச்சி
(iii) Plastic – நெகிழி
(iv) Escalator – மின்படிக்கட்டு / நகரும் படிக்கட்டு
(v) Apartment – அடுக்குமாடி
(vi) Straw – வைக்கோல்
(vii) Mass Drill – பெரிய அளவிலான உடற்பயிற்சி / கூட்டு உடற்பயிற்சி
(viii) Horticulture – தோட்டக் கலை
(ix) Average – சராசரி

**4. Ship என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.**

கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி.

**5. உலக அளவில் கணிதச் சூத்திரங்களையும், வேதியியல் குறியீடுகளையும் தமிழில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ. குழந்தைசாமி கூறுகிறார்?**

உலக அளவிலான கணிதச் சூத்திரங்களையும் வேதியியல் குறியீடுகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு பயன்படுத்த வேண்டும் என்று வா.செ.குழந்தைசாமி கூறுகிறார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# மொழியோடு விளையாடு

### எண்ணங்களை எழுத்தாக்குக.



முயற்சி திருவினையாக்கும்
என்ற வள்ளுவனின்
வாக்கு பொய்க்கவில்லை.
சிறுவனின்
முயற்சிக்குக் கிடைத்தது
தூண்டிலில் மீன்.

### தேர்க்கவி (இரத பந்தம்) தேர் கவி- எழுதி பழகுக.

**சித்திரகவி வகைகளுள் ஒன்று தேர்க்கவி. தேர் வடிவத்தினுள் சொற்களை அமைத்துப் பாடுவது.**




நில் செல்
வானம்
நம் வசம்
வா தோழா வா!

### விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

1. தனிமொழி – அறிவு, தொடர்மொழி வண்ணமயில், பொதுமொழி – பலகை
2. கார்காலம் – ஆவணி, புரட்டாசி, குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை, முன்பனி – மார்கழி, தை.
3. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
4. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை
5. சேரன் – வில், சோழன் – புலி, பாண்டியன் – மீன்.

### செய்து கற்போம்

**நீவிர் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள வழிபாட்டுத்தலங்கள், சுற்றுலாத்தலங்கள் போன்றவற்றிற்குச் சென்று அங்கு உமக்குக் கிடைக்கும் கலையனுபவங்களைக் கட்டுரையாக்குக.**

#### செஞ்சிக்கோட்டை

**முன்னுரை :**

செஞ்சிக் கோட்டையானது இராஜாதேசிங்கு என்ற நாயக்கர் மன்னர் ஆண்ட ஒரு இடமாகும். இந்தக் கோட்டையானது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்தக் கோட்டை கற்களால் கட்டப்பட்டக் கோட்டையாகும். இந்த கோட்டையின் உள்ளேயும் வெளியேயும் வழிபாடு செய்ய கோயில்களும் உள்ளன. இது மிகவும் இயற்கைச் சூழலுடன் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores
www.CBSEtips.in

இயல் 7

வையத் தலைமை கொள் - நாடு, சமூகம், அரசு, நிருவாகம்

# காற்றில் கலந்த பேரோசை

- சுந்தர ராமசாமி

உரைநடை உலகம்

**நூற்குறிப்பு :**

ஜீவா என்றழைக்கப்படும் ப.ஜீவானந்தம் தொடக்கத்தில் காந்தியவாதியாகவும் பிறகு சுயமரியாதை இயக்கப் போராளியாகவும் பொதுவுடைமை இயக்கத் தலைவராகவும் செயல்பட்டார்; சிறந்த தமிழ்ப் பற்றாளர்; எளிமையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

நாகர்கோவிலைச் சேர்ந்த சுந்தர ராமசாமி, நவீனத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர். **பசுவய்யா** என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர். **ரத்னாபாயின் ஆங்கிலம், காகங்கள்** உள்ளிட்ட சிறுகதைகளை எழுதியிருப்பதுடன் **ஒரு புளியமரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள், குழந்தைகள் பெண்கள் ஆண்கள்** ஆகிய புதினங்களையும் எழுதியுள்ளார். **செம்மீன், தோட்டியின் மகன்** ஆகிய புதினங்களை மலையாளத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். பாடப்பகுதியாக உள்ள இக்கட்டுரை 1963இல் தாமரை இதழின் ஜீவா பற்றிய சிறப்பு மலரில் வெளியானது.

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. ‘ஜனப்பிரளயம்’ என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது? அரையாண்டுத் தேர்வு 2019

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

**விடை:** அ) மக்கள் அலை

### குறுவினா

1. ‘நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்’ என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக. மார்ச் 2020

(i) ஒரு சில கருத்துகளை விரிவாகச் சொல்லிப் புரியவைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.

(ii) வாண வேடிக்கைக்காரன் ‘நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்’ இரண்டு கைப்பிடி விஷயம்தான் எடுத்துக்கொள்வார். மேடை மீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்.

(iii) பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும், குடைகுடையாய் இறங்கி வரும்; மாலை மாலையாய் இறங்கி வரும்.

### சிறுவினா

1. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை? அ.மா.வி, அரையாண்டுத் தேர்வு 2018, 19 மார்ச் 2019

(i) பேச்சுக்கலை அவர் பெற்ற வரம். ஜீவா பேசுகையில் வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.

(ii) பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்கள் எத்தனையோ இருந்தாலும், ஜீவா அவற்றைக் காலடியில் போட்டு மிதித்தவர். அவருடைய நடை இரவல் நடையன்று. கற்று அறிந்ததும் அல்ல.

(iii) நம் நாட்டு மக்களின் தரத்தையும் அனுபவ அறிவையும் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுநடை அது.

(iv) அதோடு, உழுது விதைத்தால் நல்ல அறுவடை காண வேண்டும் என்பதில் ஜீவாவுக்கு நிர்ப்பந்தமும் உண்டு. இந்த தேசத்தில் பேச்சு, அதற்குரிய பலனைத் தர வேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும்? என்பதும் ஜீவாவுக்குத் தெரியும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



புணர்ச்சி விதி :

1. **நீரோடை – நீர் + ஓடை** அரையாண்டுத் தேர்வு 2019

விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி நிலைமொழியின் ஈற்று மெய்யுடன்(ர்) வருமொழியின் முதல் உயிருடன் (ஓ) சேர்ந்து (ர் + ஓ = ரோ) நீரோடை எனப் புணர்ந்தது.

2. **சிற்றூர் – சிறுமை + ஊர்**

ஈறுபோதல் விதிப்படி 'மை' கெட்டு சிறு + ஊர் என நிற்கும்.

தன்னொற்றிரட்டல் விதிப்படி 'ற்' இரட்டித்து சிற்று + ஊர் என மாறும்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரம் வந்து வருமொழி முதலில் உயிர் வந்தால் நிலைமொழி 'உ' கரம் தன் மெய்விட்டு ஓடும். சிற்ற் + ஊர் என நிற்கும். உடல்மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே எனும் விதிப்படி நிலைமொழியின் ஈற்று மெய்யும் (ற்) வருமொழியின் முதல் உயிரும் (ஊ) சேர்ந்து (ற் + ஊ = றூ) சிற்றூர் எனப் புணரும்.

3. **கற்பிளந்து – கல் + பிளந்து** அரையாண்டுத் தேர்வு 2018

லள வேற்றுமையில் வலிவரின் றளவும் என்னும் விதிப்படி 'ல்' 'ற்' ஆக மாறி கற்பிளந்து எனப் புணர்ந்தது.

4. **மணிக்குலம் – மணி + குலம்**

இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் எனும் விதிப்படி மணி + குலம் = மணிக்குலம் என்றானது.

5. **அமுது + என்று = அமுதென்று**

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்னும் விதிப்படி குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்து புணரும் போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டு ஒடிவிடும். அம்மெய்யுடன் வருமொழி உயிர்சேர்ந்து உயிர்மெய்யாகும்.

அமுது (த் +உ) + என்று = அமுத் + என்று ஆனது பின்பு

உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி அமுத் + என்று = அமுதென்று ஆனது.

6. **புவியாட்சி – புவி + ஆட்சி** மார்ச் 2020

யகர உடம்படுமெய் தோன்றியது.

இ, ஈ, ஐ வழி யவ்வும் – புவி(ய்) + ஆட்சி

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே – புவி + ய் + ஆட்சி = புவியாட்சி

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' – யார் யாரிடம் கூறியது? அ.மா.வி 2018

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

**விடை: இ) அமைச்சர் மன்னரிடம்**

### குறுவினா

1. **உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?** மார்ச் 2020

**உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தவை :**

(i) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் குளம், குட்டை, ஏரிகள் உருவாயின. தரிசு நிலங்கள் பயிர் செழிக்கும் விளைநிலங்களாக மாறி பயிர் விளைந்தது.

(ii) உழவர்கள் வாழ, சிற்றூர்கள் உண்டாயின. கல்லையும் மலையையும் பிளந்து உலோகங்களைக் கண்டு கருவிகள் செய்யப்பட்டன. தங்கம் கண்டெக்கப்பட்டது. கடலுக்குள் மூழ்கி மூச்சடக்கி முத்து எடுக்கப்பட்டது.

2. **அலைகடல். புதுக்கியவர் – இலக்கணக் குறிப்பு தருக.**

(i) அலைகடல் – வினைத்தொகை

(ii) புதுக்கியவர் – வினையாலணையும் பெயர்





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



## கற்பவை கற்றபின்

1. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (738)
என்ற குறள்வழி நாட்டிற்கு அழகு சேர்ப்பன குறித்துக் கலந்துரையாடுக.

ஆண்டாள் : திருக்குறள் பற்றி என்ன நினைக்கிறாய்?

யசோதை : திருக்குறள் உலகப் பொதுமறை நூல் இதில் கூறப்படாத கருத்துக்களே இல்லை.

ஆண்டாள் : அப்படியா?

யசோதை : ஆமாம்.

ஆண்டாள் : இந்தக் குறளில் நாட்டிற்கு எது அழகு சேர்ப்பது எனக் கூறியுள்ளார்.

யசோதை : நோயில்லாதிருத்தல் வேண்டும் அவை மனிதனுக்கு அழகு.

ஆண்டாள் : அதுமட்டுமல்ல, செல்வம், விளை பொருட்கள், வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் போன்ற ஐந்தும் நாட்டிற்கு அழகு சேர்ப்பதாகும்.

யசோதை : அங்கு காவல் என்பது, அரசன் காவலும், வாழ்வோர் காவலும் அரண் காவலும் அடங்கி உள்ளன.

ஆண்டாள் : ஒரு மனிதன் நோயில்லாமல் இருந்தாலே! செல்வம், விளைபொருட்கள், வளம், இன்பவாழ்வு நல்ல காவல், என ஐந்தும் கிடைத்தால் நாட்டிற்கு அழகுதான்.

யசோதை : நாட்டிற்கு அழகு சேர்ப்பது நோயில்லாத மனிதர்கள், செல்வம் கொழிக்கும் வளமான நாடு திறமையான அரசன், இவையெல்லாம் இருந்தால் வாழ்வில் இன்பம் பொங்கும்.

ஆண்டாள் : இந்தத் திருக்குறள் நாட்டின் அழகை அழகாக ஐந்து வார்த்தைகளில் விளக்கமாகக் கூறுகிறது.

யசோதை : நன்றி, வணக்கம்.

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்களுள் ஒன்று**
அ) பரிபாடல் ஆ) அகநானூறு இ) பதிற்றுப்பத்து **விடை: இ) பதிற்றுப்பத்து**

2. **சேர மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளை எடுத்தியம்பும் நூல்**
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) கலித்தொகை **விடை: ஆ) பதிற்றுப்பத்து**

3. **பதிற்றுப்பத்தில் கிடைக்கப் பெறாத பகுதி**
அ) முதல் பத்தும், இறுதிப் பத்தும்
ஆ) இரண்டாம் பத்தும், ஐந்தாம் பத்தும்
இ) ஆறாம் பத்தும், ஏழாம் பத்தும் **விடை: அ) முதல் பத்தும், இறுதிப் பத்தும்**

4. **'நிரையம்' சொல்லின் பொருள்**
அ) நரகம் ஆ) மிகு வலிமை இ) விரும்பிய **விடை: அ) நரகம்**

5. **பாடலின் இறுதியில் துறை, வண்ணம், தூக்கு, தலைப்பு இடம்பெறும் நூல்**
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து **விடை: இ) பதிற்றுப்பத்து**

6. **வண்ணம் என்பது**
அ) சந்த வேறுபாடு ஆ) சொல் வேறுபாடு இ) சீர் வேறுபாடு
**விடை: அ) சந்த வேறுபாடு**





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 7 வையத் தலைமை கொள் - நாடு, சமூகம், அரசு, நிருவாகம்

# ஆக்கப்பெயர்கள்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

### பயிற்சி - 1

**கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்தெழுதுக.**

எங்கள் பள்ளியில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவிற்குத் காவல்துறை ஆணையாளர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர், "மாணவர்களாகிய நீங்கள் படிப்பகங்களைப் பயன்படுத்தி விண்ணியல், மண்ணியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்க வேண்டும். நல்ல நண்பர்களைக் கூட்டாளி ஆக்கிக்கொண்டு உதவியாள் இல்லாமலே ஒரு நிறுவனத்தின் மேலாளராகவோ முதலாளியாகவோ ஆகலாம்" என்று கூறி மாணவர்கள் ஊக்கப்படுத்தினார்.

விடை:

ஆக்கப்பெயர்கள் : ஆணையாளர், அழைப்பாளர், படிப்பகம், கூட்டாளி, உதவியாள், மேலாளர், முதலாளி

### பயிற்சி - 2

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) விடை: உளவாளி
2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்) விடை: நூலகம்
   மார்ச், அரையாண்டுத் தேர்வு 2019
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) விடை: வருமானம்
   மார்ச், அரையாண்டுத் தேர்வு 2019
4. வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்? (தாரி) விடை: பட்டதாரி
5. அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழத் தந்திடுவான்(ஆள்) விடை: படியாள்/பண்ணையாள்

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. **அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் – இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்.**
   அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்
   இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
   விடை: ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
2. **ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.** ஜூன் 2019
   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் ஈ) ஆசிரியர் விடை: ஈ) ஆசிரியர்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



**சர்தார் வல்லபாய் படேல் :**

"இந்தியாவின் இரும்பு மனிதர்", பிஸ்மார்க் என்று பெருமையுடன் அழைக்கப்படுபவர் சர்தார் வல்லபாய் படேல் ஆவார். இவர் குஜராத் மாநிலத்திலுள்ள நாடியாத் மாவட்டம் கரம்சந்த் என்னும் கிராமத்தில் 1875ஆம் அண்டு அக்டோபர் -31ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் ஜவேரிபாய்-இலாட்பாய் ஆவர்.

குஜராத் வித்யா பீடம் என்ற கல்வி நிறுவனத்தைத் தொடங்கினார் மகாத்மா காந்தி படேலுக்கு "சர்தார்" என்று பட்டம் கொடுத்துச் சிறப்பித்தார். 1900-ஆம் ஆண்டு கோத்ரா என்னும் இடத்தில் வழக்கறிஞராக தன்னுடைய பணியைத் தொடங்கினார். கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1946-ஆம் ஆண்டில் நேருவின் தலைமையில் இருந்து இடைக்கால அரசில் "துணைப் பிரதமராக" இருந்தார். 1950-ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் நாள் படேல் காலமானார். சுதந்திரப் போராட்டத்தில் அவர் ஆற்றிய பணிகளுக்காகவும், ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்க அவர் ஆற்றிய தொண்டிற்காகவும் அவருக்கு 1991-ஆம் ஆண்டு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

நேதாஜி, இந்து, முஸ்லீம் எனப் பிரிந்து கிடந்த மக்களை 'ஜெய்ஹிந்த்' என்ற வாசகத்தால் ஒன்றுப் படுத்தினார். அதேபோல் சிறிது சிறிதாக சிதறிக் கிடந்த இந்தியாவை உருவாக்க பாடுப்பட்டவர் சர்தார் வல்லபாய் படேல் ஆவார். இருவரும் சுதந்திரத்திற்கும் போராடியவர்கள் ஆவர்.

## படித்துப் பார்த்துப் படைக்க.

- ஹைக்கூ என்பதற்குத் தமிழில் 'துளிப்பா' என்று பொருளுண்டு தெரியுமா?
- **கவிதைகளுக்குப் பொருத்தமாகத் தலைப்பிடுக.**

| தன்னம்பிக்கை | எரிமலை | சகுனம் |
|---|---|---|
| பாத்தாவது தடவையாக<br>விழுந்தவனுக்கு<br>முத்தமிட்டுச் சொன்னது பூமி<br>'ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!'<br>– ஈரோடு தமிழன்பன் | எப்போதும் மத்தாப்பு<br>கொளுத்தி விளையாடுகிறது<br>மலையருவி.<br>– கழனியூரன் | தகப்பன் இழந்த<br>விதவையைக் கண்டு<br>ஒதுங்கி நிற்கிறான்.<br>– அத்தி. செந்தாமரை |

## நிற்க அதற்குத் தக

**உம்முடைய பொறுப்பை உணர்ந்து கட்டங்களை நிறைவு செய்க.**

| அடையாளம் | பெருமிதம் |
|---|---|
| இந்தியன் | ஒருமைப்பாட்டுணர்வுடன் சமூகக் கூட்டமைப்பில் இணைந்து வாழ்கிறேன். |
| தமிழன் | தமிழின் பெயரால் தலை நிமிர்கிறேன். |
| மாணவன் | பள்ளியில் நல்ல மாணவனாக இருப்பேன். |
| மகன்/மகள் | பெற்றோருக்கு உற்ற துணையாக இருப்பேன். |
| சகோதரன்/சகோதரி | உடன்பிறப்புகளின் உயர்வுக்குக் காரணமாக இருப்பேன். |
| தோழன்/தோழி | தோழமைப் பண்புடன் பழகுவேன். |

## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| 1. உத்திகள் – Strategies | 4. பட்டிமன்றம் – Debate |
| 2. சமத்துவம் – Equality | 5. பன்முக ஆளுமை – Multiple Personality |
| 3. தொழிற்சங்கம் – Trade Union | 6. புனைபெயர் – Pseudonym |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

இயல் 8

யாரையும் மதித்து வாழ் - மனிதம், ஆளுமை

# தாகூரின் கடிதங்கள்

உரைநடை உலகம்

**தாகூரைப் பற்றி...**

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் **'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி'** என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தம் இளம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார். 1913ஆம் ஆண்டு **கீதாஞ்சலி** என்ற கவிதை நூலுக்கு இலக்கியத்துக்கான **நோபல் பரிசு** பெற்றார். 1919ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன்வாலா பாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர், ஆங்கிலேய அரசைக் கண்டித்து அவர்கள் வழங்கிய **'சர்'** பட்டத்தைத் திருப்பி அளித்தார். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப் பாடல்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள், ஏறக்குறைய இருபது பெரு நாடகங்கள், குறு நாடகங்கள், எட்டு நாவல்கள், எட்டுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள் என இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களிலும் நூல்களை எழுதியுள்ளார். அவற்றுடன் அவருடைய ஓவியப் படைப்புகள், பயணக் கட்டுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டால் அவருடைய ஆளுமையின் பேருருவை அறிய முடியும். குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும். தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். **'குருதேவ்'** என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் தாகூரின் **'ஜனகணமன'** என்னும் பாடல் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகவும் **'அமர் சோனார் பங்களா'** என்னும் பாடல் வங்காள தேசத்தின் நாட்டுப் பண்ணாகவும் இன்றும் பாடப்பட்டு வருகின்றன.

சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் **த.நா. குமாரசுவாமி.** அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, வங்கம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். வங்க அரசு, தமிழ் – வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி **'நேதாஜி இலக்கிய விருது'** அளித்துச் சிறப்பித்துள்ளது.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

**1. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ...................... என்று தமிழில் வழங்கப்படும்.**

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) செய்தி, வழிபாடு, பயன்பாடு

**விடை: அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு**

**குறுவினா**

**1. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?** மார்ச் 2019

(i) நாட்டுப்புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்க வல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.

(ii) பட்டணத்திலே மனித சமுதாயம் தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவது கூட இல்லை.

**2. பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் – நிறுத்தக்குறியிடுக.**

'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16–ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



இயல் 8

யாரையும் மதித்து வாழ் - மனிதம், ஆளுமை

# ஒவ்வொரு புல்லையும்

- இன்குலாப் கவிதைப்பேழை

**பாடல்**

**ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்**
**பறவைகளோடு எல்லை கடப்பேன்**
**பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும்**
**எனக்குத் தெரிந்த சொல்லால் விளிப்பேன்**
**நீளும் கைகளில் தோழமை தொடரும்**
**நீளாத கையிலும் நெஞ்சம் படரும்**
**எனக்கு வேண்டும் உலகம் ஓர் கடலாய்**
**உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்**
**கூவும் குயிலும் கரையும் காகமும்**
**விரியும் எனது கிளைகளில் அடையும்.**
**போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்**
**பொங்கும் சமத்துவப்புனலில் கரையும்!**
**எந்த மூலையில் விசும்பல் என்றாலும்**
**என் செவிகளிலே எதிரொலி கேட்கும்.**
**கூண்டில் மோதும் சிறகுகளோடு**
**எனது சிறகிலும் குருதியின் கோடு!**
**சமயம் கடந்து மானுடம் கூடும்**
**சுவர் இல்லாத சமவெளி தோறும்.**
**குறிகள் இல்லாத முகங்களில் விழிப்பேன்**
**மனிதம் என்றொரு பாடலை இசைப்பேன்!**

– இன்குலாப்

### பொருளுரை :

ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன். பறவைகளோடு எல்லை கடந்து போவேன். பெயர் தெரியாத கல்லையும் மண்ணையும் தனக்குத் தெரிந்த சொற்களால் அழைப்பேன். நீளும் கைகளில் தோழமை தொடருமாம். நீளாத கையிலும் நெஞ்சம் படருமாம். உலகமே கடலாக வேண்டும். அதில் நான் ஓர் துளியாய் இருக்க வேண்டும். குயிலும், காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும். எந்த மூலையில் அழும் குரல் ஒலித்தாலும் என் செவிகளில் வந்து எதிரொலிக்கும். கூண்டில் மோதும் சிறகுகளோடு மோதி காயம் ஏற்படுவதால் என் நெஞ்சம் பதறுகிறது. சாதி சமயம் இல்லாத, மனிதநேயம் எங்கும் பரவிட வேண்டும்.

### விரிவான விளக்கம் :

'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்னும் மகாகவி கூற்றின் நீட்சியே 'கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும்' என்னும் இன்குலாபின் குரலாகவும் ஒலிக்கிறது. தம் எழுத்துகள் எளிய மக்களுக்கானவை என்னும் உறுதியுடன் எண்ணம், சொல், சயல் என்ற மூவகையிலும் நின்று வாழ்ந்தவர். அவர் பெயர் சொல்லி அழைக்க ஆசைப்பட்ட ஒவ்வொரு புல்லும் இந்த உண்மையை நமக்குச் சொல்லிக் கொண்டே இருக்கும். இன்குலாப் அவரது ஆளுமை மதம், மொழி, தேசம், இனம் என்று எந்த வரையறைக்குள்ளும் தன்னை அடக்கிக் கொண்டார் என்ற சொல்லுக்கே இடமில்லை. கலைகலைக்காகவே என்னும் தரப்பிற்கு மிக அருகில் வரும் கவிதையாக இதனை உணர்கிறேன்.

### ஆசிரியர் குறிப்பு :



- சாகுல் அமீது என்னும் இயற்பெயருடைய இன்குலாப் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், மொழிபெயர்ப்பு என இலக்கியத்தில் விரிவான தளங்களில் இயங்கியவர்.
- அவருடைய கவிதைகள், **'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்'** என்ற பெயரில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன.
- மரணத்துக்குப் பிறகு அவருடைய உடல், அவர் விரும்பியபடி செங்கை அரசு மருத்துவக்கல்லூரிக்கு அளிக்கப்பட்டது.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



யாரையும் மதித்து வாழ் - மனிதம், ஆளுமை

# இயல் 8 மனோன்மணீயம்

- பெ.சுந்தரனார் கவிதைப்பேழை

சுந்தர முனிவர் தனது அறையிலிருந்து ஆசிரமம் வரை யாரும் அறியாவண்ணம் சுரங்கம் அமைக்கும் பணியை நடராசனுக்கு அளித்திருந்தார். நடராசனும் அப்பணியை ஓரளவு முடித்துவிட்டான். 'இன்னும் சிறுபகுதி வேலை ஆசிரமத்தில் செய்ய வேண்டியுள்ளது. அதுவும் இன்றிரவு முடிந்துவிடும்' என்று எண்ணிக்கொண்டு காலை வேளையில் ஊரின் புறமாக நடராசன் தனித்திருந்தான். அப்போது தனக்குத்தானே பேசிக்கொள்கிறான்.

**மூன்றாம் அங்கம், இரண்டாம் களம்**

**இடம் :** ஊர்ப்புறத்து ஒரு சார்

**காலம் :** எற்பாடு

நடராசன் (தனிமொழி)

**பாடல் – இலக்கு வேண்டும்**

**காலையில் கடிநகர் கடந்து நமது**
**வேலை முடிக்குதும், வேண்டின் விரைவாய்**
**இன்று இரா முடிக்கினும் முடியும்;...**
**எவ்வினை யோர்க்கும் இம்மையில் தம்மை**
**இயக்குதற்கு இன்பம் பயக்கும்ஓர் இலக்கு**
**வேண்டும்; உயிர்க்கு அது தூண்டுகோல் போலாம்.**
**ஈன்று எப்பொருள்தான் இலக்கற்று இருப்பது?**

**பொருளுரை :**

திருநெல்வேலிக் கோட்டைக்கு அப்பால், ஊரின் புறமாகக் காலைவேளையில், நடராசன், தனியே செல்கிறான். அரண்மனையிலிருந்து, சுந்தரமுனிவருடைய ஆசிரமத்துக்குச் சுரங்கம் அமைக்கும் வேலையை முடித்து விட்டான். இன்னும் சிறுபகுதிவேலை, ஆசிரமத்தில் செய்யவேண்டியிருக்கிறது. நடராசன், தனக்குத்தானே பேசிக்கொள்கிறான்: வேலை இன்று இரவு முடிந்துவிடும். வாணியின் முகக்காட்சி, என் மனத்தில் இருந்து, இந்த வேலையைச் செய்து முடிக்க, என்னை ஊக்கப்படுத்துகிறது. அதனால் அல்லவா, இந்த வேலை, இவ்வளவு விரைவாக, இப்போது முடிந்தது! யாரையும் இயக்குவதற்கு, இன்பமுள்ள இலட்சியம் வேண்டும். எல்லோருக்கும் ஒவ்வொரு குறிக்கோள் வேண்டும். உலகத்திலே குறிக்கோள் இல்லாதவை எவை?

**சொல்லும் பொருளும் :**

| | |
|---|---|
| கடிநகர் | – காவல் உடைய நகரம் |
| இலக்கற்று | – குறிக்கோள் இல்லாதவை |

**பாடல் – புல்லின் பரிவு**

**இதோ ஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்**
**சதா தன் குறிப்பொடு சாருதல் காண்டி;**
**அதன்சிறு பூக்குலை அடியொன்று உயர்த்தி**
**இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை**
**நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்**
**பதமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து**
**ஆசுஇலாச் சிறுகாய் ஆக்கி, இதோ! தன்**
**தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே**
**"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்**
**தழைப்பதற்கு இடமிலை; சிறார்நீர் பிழைப்பதற்கு**
**ஏகுமின், புள் ஆ எருது அயத்து ஒருசார்**
**சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்**
**புக்க விட் டிருக்கும்இப் புல்லின் பரிவும்**
**பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும்**
**சிறுமையாச் சிந்தனை செயாதுஆங்காங்கு**
**தோற்றுபே ரழகும் ஆற்றல்சால் அன்பும்**
**போற்றுதம் குறிப்பிற்கு ஏற்றதோர் முயற்சியும்**
**பார்த்துப் பார்த்து தம்கண் பனிப்ப,**
**ஆர்த்தெழும் அன்பினால் அனைத்தையுங் கலந்துதம்**
**என்பெலாம் கரைக்கும்நல் இன்பம் திளைப்பர்.**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



நடராசன் : மண்ணைப் பதப்படுத்துவது உழவர்களுக்கு உதவுவது என்னுடைய வேலை.
நாங்கூழ்ப்புழு : உன்னுடைய உழைப்பு மக்களுக்குப் பயன்படுகிறதா?
நடராசன் : அதிகமாகவே பயன்படுகிறது.
நாங்கூழ்ப்புழு : நீங்கள் யாரைக் கண்டு பயப்படுவாய்.
நடராசன் : அறிவியலைக் கண்டு.
நாங்கூழ்ப்புழு : ஏன்?
நடராசன் : அறிவியல் விவசாய நிலங்களை அசுத்தப்படுத்துகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுகின்றது.
நாங்கூழ்ப்புழு : உண்மைதான். நீங்கள் இவ்வளவு நேரம் எங்களுக்கு பயனுள்ள தகவலைத் தந்தமைக்கு நன்றி வணக்கம்.
நடராசன் : நன்றி, வணக்கம்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. மனோன்மணியம் நாடகநூலை இயற்றியவர்**
அ) சுந்தரம் பிள்ளை ஆ) சுந்தர முனிவர் இ) நடராசன் **விடை: அ) சுந்தரம் பிள்ளை**

**2. மனோன்மணியம் நாடகநூலின் ஆக்கத்திற்குத் துணைநின்ற ஆங்கிய நூல்**
அ) இரகசிய வழி ஆ) புல்லின் பரிவு இ) சிவகாமி சரிதம் **விடை: அ) இரகசிய வழி**

**3. நாடகத் தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினை உடைய நூல்**
அ) சிலப்பதிகாரம் ஆ) இராமாயணம் இ) மனோன்மணீயம்
**விடை: இ) மனோன்மணீயம்**

**4. மனோன்மணீயம் நூலின் கண்கவரும் துணைக்கதை**
அ) சிவகாமியின் சரிதம் ஆ) சிவகாமி சரிதம் இ) சிவகாமி செல்வன்
**விடை: ஆ) சிவகாமி சரிதம்**

**5. 'இரகசிய வழி' என்ற ஆங்கில நூலை எழுதியவர்**
அ) ரிப்பன் பிரபு ஆ) லிட்டன் பிரபு இ) கர்னிங் பிரபு
**விடை: ஆ) லிட்டன் பிரபு**

**6. மனோன்மணீயம் எத்தனை அங்கங்களையும் காட்சிகளையும் கொண்டது.**
அ) 5, 20 ஆ) 20, 5 இ) 10, 12 **விடை: இ) 10, 12**

**7. சுந்தரம் பிள்ளையின் ஞான ஆசிரியர்**
அ) ஞானியாரடிகள் ஆ) கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள்
இ) வையாபுரி பிள்ளை **விடை: ஆ) கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள்**

**8. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர்:** மார்ச் 2020
அ) பேரணாம்பட்டை ஆ) ஆலப்புழை இ) தென்காசி
ஈ) புதுச்சேரி **விடை: ஆ) ஆலப்புழை**

**9. ஜீவகன் புதியதாய் கோட்டை நிறுவிய இடம்**
அ) புதுக்கோட்டை ஆ) மதுரை இ) திருநெல்வேலி
**விடை: இ) திருநெல்வேலி**

**10. ஜீவகனின் மகள்..........................**
அ) விசயை ஆ) மனோண்மணி இ) பாஞ்சாலி
**விடை: ஆ) மனோண்மணி**



www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக.



உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பது
உன் அன்பை
கருணையை
மனிதாபிமானத்தை
உயிரிரக்கத்தை
உண்மை வெளிப்பாட்டை
தவிர வேறு எதுவுமில்லை மனிதனிடம்
நான்வேறு நீ வேறு
என்பது பொய்
நானும் நீயும் ஒன்றுதான்
நன்றியுணர்வில்
என்பதை உணர்
அதுபோதும் எனக்கு.

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | | 3 | 4 |
| 5 | | | | | | | 6 | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | 7 | | | | | | |
| | | | | 8 | | | 9 | | |
| | | 10 | 11 | | | 12 | | 13 | |
| 14 | | 15 | | 16 | | | | | |
| | | | | 17 | | | | | 18 |
| | 19 | | | | | | | | 20 |

**இடமிருந்து வலம்:**

**1.** மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளைக் கூறும் துறை (9)
**7.** தேன் – மற்றொரு சொல் (4)
**15.** புல்லின் இதழ்கள் – நூலாசிரியர் (4)
**16.** கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடம் (4)
**17.** சி.சு. செல்லப்பா நடத்திய இதழ் (4)
**19.** ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பக்தி இலக்கியம் (6)





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.Surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# மொழித்திறன் பயிற்சிகள்

**வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுக :**

1. **நீயும் நானும் வந்தேன்.**
நீயும் நானும் வந்தோம்.
2. **நான் பார்த்தது அவைகள் அன்று.**
நான் பார்த்தவை அவை அல்ல.
3. **பழங்கள் ஒவ்வொன்றும் சுவையாக இருந்தன.**
ஒவ்வொரு பழமும் சுவையாக இருந்தது.
4. **தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றனர்.**
தமிழ்நாட்டு அணி போட்டியில் வென்றது.
5. **புலி வந்தன; எருதுகள் ஓடியது.**
புலி வந்தது; எருதுகள் ஓடின.
6. **காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தது.**
காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தன.
7. **நரிவந்தன; ஆடுகள் ஓடியது.**
நரி வந்தது; ஆடுகள் ஓடின.
8. **மாடுகள் பயிரை மேய்ந்தது.**
மாடுகள் பயிரை மேய்ந்தன.
9. **கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடியது.**
கயல்விழி என்னும் பெண் நாட்டியம் ஆடினாள்.
10. **மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கின.**
மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியது.
11. **தென்றல் மெல்ல வீசின.**
தென்றல் மெல்ல வீசியது.
12. **இது பொது வழி அல்ல.**
இது பொது வழியன்று.
13. **இந்த வாழைமரம் காய்களையும் கனிகளையும் தந்தன.**
இந்த வாழைமரம் காய்களையும் கனிகளையும் தந்தது.
14. **ஆடைகள் ஒவ்வொன்றும் அழகாக இருந்தன.**
ஆடைகள் ஒவ்வொன்றும் அழகாக இருந்தது.
15. **இப்பாதையில் போக்குவரத்து, தடை செய்யப்பட்டதால் பேருந்துகள் ஓடாது.**
இப்பாதையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டதால் பேருந்துகள் ஓடா.
16. **நான் அரசினர் பள்ளியில் படித்தேன்.**
நான் அரசுப் பள்ளியில் படித்தேன்.
17. **ஒன்றோ அல்லது இரண்டோ தருக.**
ஒன்று அல்லது இரண்டு தருக (அ) ஒன்றோ, இரண்டோ தருக.
18. **சில வீரர்கள் நாட்டிற்காகத் தம் இன்னுயிர் ஈந்தனர்.**
வீரர்கள் சிலர் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# கவிதைகள்

| | |
|---|---|
| **வானம்**<br>வாழ்வில் இன்பமும் துன்பமும்<br>உண்டென்பதை உணர்த்த<br>வானில் சந்திரனையும் சூரியனையும்<br>உன்னகத்தே வைத்தாய்!<br>வாழ்வில் தோன்றி மறையும்<br>நகைச்சுவை போல<br>வானில் தோன்றி மறையும்<br>மின்னலைக் காட்டினாய்!<br>மனிதன் கைமாறு கருதா<br>உதவிகள் செய்வதற்கு<br>முகில் கூட்டங்களை வைத்து<br>மழைபெய்வித்துச் சான்றானாய்!<br>வானமே! எத்தனைப் பேருக்கு<br>அடைக்கலம் தந்தாய்!<br>வாழ்க்கைப் பெட்டகமே நீயேதான்!<br>வாழ்க வளர்கவே! | **உழைப்பு** [அரசு மாதிரி வினா 2018]<br>உழைப்பு இல்லையேல்<br>உணவும், மகிழ்ச்சியும்<br>இல்லை இன்று<br>உழைத்தால் வயதான போது<br>உட்கார்ந்து உண்ணலாம்<br>உழைக்க வேண்டிய காலத்தில்<br>உழைக்கவில்லை என்றால்<br>ஓய்வு எடுக்க வேண்டிய<br>காலத்தில் உழைக்க வேண்டும்<br>உயிரினங்கள் கூட உழைக்கின்றன<br>கையிருந்தும் உழைக்காமல்<br>இருந்தால் வாழ்க்கை இல்லாமலாகும். |
| **ஆறு**<br>மழையிலிருந்து விழும்பொழுது<br>அருவியாகின்றாய்...<br>காடு, கழனியை கடக்கும்பொழுது<br>ஆறாகின்றாய்...<br>மூலிகைச் செடிகளுக்குள் புகுந்து வரும்பொழுது<br>மருத்துவராகின்றாய்...<br>மொத்தத்தில் மக்களை மகிழ்விக்கும்<br>குழந்தையாகின்றாய்... | **வானவில்**<br>இராமனின் கை வில் இலங்கையை அழித்தது<br>அர்ச்சுனன் கை வில் பாரதம் படைத்தது<br>அரசர்கள் கை வில் ஆபத்தை விளைத்தது<br>ஆயினும் ஓர்வில் அன்பினை வளர்த்தது!<br>வண்ணங்கள் நிறைந்த வில்<br>எண்ணங்கள் நிறைந்தவில்<br>வானத்தில் உள்ளவில் வானவில் அந்தவில்<br>கன்னங்கள் கனியெனும் கன்னியர் புருவவில்<br>கார்முகில் கிழித்திடும் கனமழை அழைத்திடும்! |
| **பூஞ்சோலை**<br>இதயங்களை கவர்ந்து<br>இழுக்கும் பூஞ்சோலையே. . .<br>உன்னை இறைவன் படைத்தானா?<br>இயற்கை அன்னை படைத்தாளா?<br>சின்னஞ்சிறு குழந்தைகளுக்கும்<br>மகிழ்ச்சியை ஏற்படுத்தும் – நீ<br>சின்னஞ்சிறு வண்டினங்களுக்கும்<br>உணவளித்து அட்சயபாத்திரமாய்<br>விளங்குகிறாயே . . .<br>என்னே ! உன் பெருந்தன்மை? | **கல்வி**<br>அறியாமையைத் தகர்க்கும் கல்வி !<br>ஆண்டியை அரசனாக்கும் கல்வி !<br>ஏழை பணக்காரன் வேறுபாடின்றி<br>எல்லோர்க்கும் வேண்டும் கல்வி !<br>வேப்பிலையாம் கல்வி என்பார் ;<br>கற்றபின் அமிர்தமாம் என்பார்.<br>கேடில்லாச் செல்வம் கல்வி ;<br>இன்பமாய்ப் பருகு அள்ளி. |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



| ஒற்றுமை | அருவி |
|---|---|
| மரங்கள் சேர்ந்தால் காடாகும்<br>மலர்கள் சேர்ந்தால் மாலையாகும்<br>மேகங்கள் சேர்ந்தால் மழையாகும்<br>மழைத்துளிகள் சேர்ந்தால் நீர்வளமாகும்<br>பறவைகளின் ஒற்றுமையைப் பார்<br>எறும்புகளின் அணிவரிசையைப் பார்<br>மட்டைப்பந்தில் ஒற்றுமையைக் காட்டுவதைவிட<br>அன்றாட வாழ்வில் ஒற்றுமையைக் காட்டு<br>ஒற்றுமையாய் வாழ்ந்தால் உயர்வாய்<br>என்றும் இதை மறவாதே நண்பா! | பச்சைப் பட்டாடை உடுத்திய மலையிலே<br>வெள்ளைச் சரிகையாய் உதிர்பவளே!<br>கருத்துக்கும் காட்சிக்கும் விருந்தாய் ஆனவளே!<br>கவிஞர் பலரை உரு வாக்கியவளே<br>மானைப் போன்று துள்ளி யோடினாய்!<br>அன்னம் போலசைந் தாடினாய்!<br>காடுகள் மேடுகள் பள்ளமெனச் சுற்றினாய்!<br>தென்ற லோடுகை கோர்த்தாய்!<br>ஆறுகளாய் மக்கள் பசித்துயர் போக்கினாய்!<br>இறுதியில் கடலில் சேர்ந்தாய்! |

# இலக்கிய நயம் பாராட்டல்

காலாண்டுத் தேர்வு 2019

1. இறைக்கின்ற கிணற்றில்நீர் சுரப்பதைப்போல்
இரத்தத்தைக் பொடுப்பதனாற் குருதி ஊறும்!
அரைக்கின்ற சந்தனந்தான் மணப்பதைப்போல்
அளிப்பதனாற் குருதியது தூய்மையாகும்!
தருகின்ற குருதியதே உயிரைக்காக்கும்
தன்னுடலுக் கூறேதும் நேர்ந்திடாது!
குருதிக்கொடை ஒன்றேதான் கொடையுள் மேலாம்
குவலயத்துள் இதுபோன்ற கொடையொன்றில்லை! – வெற்றியழகன்

**மையக்கருத்து** : இறைக்கின்ற கிணற்றில் நீர் ஊறுவதுபோல, இரத்தத்தைக் கொடுப்பதால் அது ஊறும். சந்தனத்தை அரைத்தால் மணம் வருவதுபோல, குருதியை அளித்தால் அது தூய்மையாகும். குருதிக் கொடைதான் மேலானது. அதை கொடுப்பதால், பிறரது உயிர் காக்கப்படும், கொடுப்பவரின் உடலுக்கு தீங்கு ஏதும் நேராது. உலகில் சிறந்த கொடை வேறு எதுவுமில்லை.

**மோனைத் தொடை** : **இ**றைக்கின்ற – **இ**ரத்தத்தை, **அ**ரைக்கின்ற – **அ**ளிப்பதனாற், **த**ருகின்ற – **த**ன்னுடலு, **கு**ருதிக்கொண்ட – **கு**வலயத்துள்

**எதுகைத் தொடை** : இ**றை**க்கின்ற–அ**ரை**க்கின்ற, த**ரு**கின்ற–கு**ரு**திக்கொடை

**அணிநயம்** : இப்பாடலில் உவமை அணி இடம் பெற்றுள்ளது. கிணற்றில் நீர் ஊறுவது போல குருதி கொடுப்பவரின் உடலில் குருதி ஊறும். அரைப்பதால் சந்தனம் மணப்பது போல, அளிப்பதால் குருதி தூய்மையாகும்.

2. நல்லதோர் வீணைசெய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?
வினையுறு பந்தினைப்போல் – உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன் – நித்தம்





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net
This is only for Sample
www.CBSEtips.in
for Full Book order Online and Available at All Leading Bookstores



# பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும்

**1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்** காலாண்டுத் தேர்வு 2019

**பழமொழி விளக்கம் :**

ஒருவன் திறமைசாலியாக இருந்தால், அவன் எந்த சிக்கலான பிரச்சனையையும் சந்தித்து, வெற்றி கொள்வான்.

**வாழ்க்கை நிகழ்வு :**

சரவணன் ஒரு திறமைசாலி. ஒருநாள் அவன் தன் இரு சக்கர வாகனத்தில் ஒரு சுரங்கப்பாலத்தின் வழியே சென்றபோது, அந்த சுரங்கப் பாலம் தொடங்குமிடத்திலிருந்து சில அடிகள் தூரத்தில் ஒரு வேன் நின்றிருந்தது. சுரங்கப் பாலத்தின் உயரம் குறைவான இருந்தது. அதை கவனத்தில் கொள்ளாமல், வேன் ஓட்டுநர் உள்ளே நுழைந்ததும், வேனின் கூரை, சுரங்கத்தின் கூரையை உரசியபடி, நின்றுவிட்டது. முன்னாலும் போக முடியவில்லை, பின்னாலும் வண்டியை எடுக்க முடியவில்லை. வேன் ஓட்டுநர் என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்தபடி இருந்தான். அச்சமயத்தில் அங்கு சென்ற சரவணன், அந்த ஓட்டுநரிடம், அந்த வேனின் நான்கு சக்கரங்களிலும் இருந்த காற்றை பாதியளவுக்கு வெளியேற்றச் சொன்னான். இதனால், வேனின் உயரம், சற்று குறைந்தது. வேனை மெதுவாக ஓட்டியபடி சுரங்கத்தை விட்டு வெளியே வந்தான் அவன். சரவணின் புத்திசாலித்தனமான யோசனை அந்த வேன் ஓட்டுநரைக் காப்பாற்றியது.

**நீதி :**

ஒரு திறமைசாலி, சாதாரணமான ஒரு யோசனையைக் கொண்டு, சிக்கலான பிரச்சனையை வென்றிடுவான்.

**2. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்** காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019

**பழமொழி விளக்கம் :** ஒருவரது மனநிலையை அவரது முகத்தைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

**வாழ்க்கை நிகழ்வு :**

பள்ளியில் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்ட சேகருக்கு முதல் பரிசும், கண்ணனுக்கு இரண்டாம் பரிசும் கிடைத்தது. இருவருக்குமே ஆளுக்கு ஒரு சுவர்க்கடிகாரம் பரிசளிக்கப்பட்டது. இருவரும் தங்கள் பரிசுப் பொருளை பெற்றுக் கொண்டனர். அடுத்த நாள், ஆசிரியர் சேகரை அழைத்து, "நேற்று நீ பெற்ற சுவர்க்கடிகார பரிசு உனக்கு ஏன் பிடிக்கவில்லை? உன் வீட்டில் ஏற்கனவே சுவர்க்கடிகாரம் இருக்கும் பட்சத்தில், அதை நீ ஏதாவது ஓர் அனாதை இல்லத்திற்கு தானமாக வழங்கியிருந்தால், அவர்கள் உன்னை பாராட்டியிருப்பர், ஆசிர்வாதமும் செய்திருப்பர் அல்லவா?" என்று கேட்டார். அதற்கு சேகர், "எனக்கு அது பிடிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் நான் இதைப்பற்றி யாரிடமும் கூறவில்லையே. உங்களுக்கு எப்படி தெரிந்தது? என கேட்டான். அதற்கு ஆசிரியர், நீ பரிசை வாங்கம் போது புன்னகையுடன் வாங்கினாய். ஆனால், கண்ணனுக்கு இரண்டாம் பரிசாக, அதே மாதிரியான கடிகாரத்தைக் கொடுக்கும் போது, உன் முகபாவனை முற்றிலும் மாறிவிட்டதை நான் பார்த்ததால் தான் இப்படி கேட்டேன்", என்றார்.

**நீதி :**

நல்ல எண்ணங்களை நம் மனதில் ஏற்படுத்திக் கொண்டால், நமது முகமும் அதை பிரதிபலித்து, அழகுடன் காட்சிதரும். எதிர்மறையான எண்ணங்கள் வெறுப்புணர்வையே ஏற்படுத்தும்.

**3. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து :** மார்ச் 2019

**பழமொழி விளக்கம் :** இருப்பதே போதும் என்று திருப்தியுற்ற மனமே தொட்டதெல்லாம் பொன்னாகும் மருந்து ஆகும்.

**வாழ்க்கை நிகழ்வு :**

கமலம் கணவனை இழந்த பெண். தன் குழந்தைகளைக் காப்பாற்ற தனக்குத் தெரிந்தவர் வீட்டில் வேலைக்காரியாக வேலை செய்து வந்தாள். கமலம் வீட்டு வேலைகளை எல்லாம் ஒழுங்காகச் செய்வதுடன் சுத்தமாகவும் வீட்டை வைத்து கொள்வாள்.

அவள் வேலை செய்யும் வீட்டுக்காரர்களும் மிகவும் நல்லவர்கள். அவளுடைய தேவையை அறிந்து அவளுக்கு உதவி செய்தனர். பிள்ளைகளுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுத்தனர். குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தனர். எவ்வித பிரச்சனையும் இன்றி நாட்கள் ஓடின.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores





வரை கறுப்பு வெள்ளைப் படங்களைப் பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு, வண்ணமயமான தொலைக்காட்சியோ எங்கள் கண்களுக்கு குளுமையான விருந்து அளித்தது. காலை முதல் மாலை வரை தொலைக்காட்சியே கதியாய் நானும் என் தங்கையும் இருந்தோம். சாப்பிடக்கூடச் செல்லாமல் இருப்பதைப் பார்த்து எங்கள் அம்மா, அப்பா திட்டிக் கொண்டே இருப்பார்கள்.

முதல் ஒரு வருடமாக எங்கள் வாழ்க்கை வண்ணத் தொலைக்காட்சியே கதி என்று ஓடியது பிறகு மெல்ல மெல்லத் தொலைக்காட்சி கவர்ச்சியிலிருந்து விடுபட்டோம். இப்போதெல்லாம் நாங்கள் படிப்பின் காரணமாகத் தொலைக்காட்சியை எப்போதோ ஒரு முறை தான் பார்க்கிறோம். வண்ணத் தொலைக்காட்சியில் கதியாய் இருந்த நாங்கள், இன்று அந்தப் பக்கமே செல்வதில்லை.

**நீதி:**

எந்தவொரு செய்தியையும் தொடர்ந்து கேட்டாலும் பார்த்தாலும் கசந்து போய்விடும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.

**20.** **"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

**பழமொழி விளக்கம் :**

உலகில் செல்வம் படைத்தவராக இருந்தாலும் நோய் இருப்பின் அவர்கள் பெரியவர்களே. ஏழ்மையானவர் ஒருவர் நோயற்ற வாழ்வு பெற்றிருந்தால் அவரே உலகில் செல்வந்தர் ஆவார்.

**வாழ்க்கை நிகழ்வு :**

என் பாசத்துக்குரிய நண்பர் சிறப்பாகக் கல்வி கற்று ஒரு பட்டதாரியானார். பின் பணத்தின் தேவையை உணர்ந்து பல மாணவர்களுக்குக் கணிதம் சொல்லிக் கொடுத்து, பல மாணவர்களைத் திறமையான மாணவர்களாக உருவாக்கினார். அவருடைய எளிமையான முறை மாணவர்களைக் கவர்ந்தது. பல பள்ளிகளிலிருந்த வந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரிடம் கல்வி பயின்றனர். கடின உழைப்பால் சில மணிநேரம் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதுண்டு அதைச் சரியாகக் கவனிக்காமல் மாத்திரைகளை மட்டும் வாங்கி உண்ணுவார். அதனால் அவருக்கு உடல் நிலை கடுமையாகப் பாதித்து மருத்துவரிடம் சென்றபோது, அளவுக்கு அதிகமாக மாத்திரைகளை உண்டதால் அவரது சிறிநீரகம் பாதித்தது என்று டாக்டர் கூறினார். பிறகு அவர் சம்பாதித்த பணம் எல்லாம் தன் நோய்க்குச் செலவு செய்ததனால் ஏழ்மைக்குத் தள்ளப்பட்டார்.

**நீதி:**

நாம் பணத்தைச் சம்பாதித்துவிடலாம். ஆனால் நம் உடல்நிலை பாதிக்கப்பட்டால் மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டுவர இயலாது. இதுவே இப்பழமொழியின் கருத்தாகும்.

## பழமொழி – மொழிபெயர்ப்பு

1. **As rare hen's teeth**

   அத்தி பூத்தாற் போல

2. **A guilty conscience needs to accuser.**

   குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.

3. **Be just before you are generous.**

   ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

4. **Bend the twig, Bent the tree.**

   ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?

5. **Constant dripping wears away the stone.**

   எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

6. **Child is the father of the man.**

   விளையும் பயிர் முளையிலேயே தெரியும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



# 11ஆம் வகுப்பு - பொது தேர்வு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு

அரசாணை (2t) எண். 50 (09-08-2018)

மொத்த மதிப்பெண்கள் - 100

எழுத்துதேர்வு 90 மதிப்பெண்கள்

அகமதிப்பீடு 10 மதிப்பெண்கள்

## அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு (அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்)

| மாணவர்கள் வருகைப் பதிவு<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள் | உள்நிலைத் தேர்வுகள்<br>அதிகபட்சம் 4 மதிப்பெண்கள் |
|---|---|
| 80 சதவீதத்திற்கு மேல் வருகை - 2 மதிப்பெண்கள்<br>75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை - 1 மதிப்பெண் | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். |
| **ஒப்படைவு/செயல்திட்டம்/களப்பயணம்<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** | **கல்வி இணைச் செயல்பாடுகள்<br>அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** |
| ஒப்படைவு/ செயல்திட்டம்/களப்பயணம் இவை மூன்றில் ஏதேனும் ஒன்று - உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். | * கல்வி இணைச் செயல்பாடுகளுள் ஏதேனும் மூன்று |

## * கல்வி இணைச் செயல்பாடுகள்

1. மரம் வளர்த்தல்
2. இலக்கிய மன்றம்
3. கணித மன்றம்
4. இயற்பியல் மன்றம்
5. வேதியியல் மன்றம்
6. உயிரியல் மன்றம்
7. வணிகவியல் மன்றம்
8. பொருளியல் மன்றம்
9. வரலாற்று மன்றம்
10. அறிவியல் மன்றம் - அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள்
11. தேசிய பசுமைப்படை
12. சாரண சாரணியர் இயக்கம்
13. நாட்டு நலப் பணித் திட்டம்
14. தேசிய மாணவர் படை
15. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்
16. சுற்றுச்சூழல் மன்றம்
17. நுண்கலை மன்றம்
18. முதலுதவி மன்றம்
19. உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம்
20. நுகர்வோர் மன்றம்
21. கலாச்சார மன்றம்
22. நாடக மன்றம்
23. தொன்மை பாதுகாப்பு மன்றம்
24. தகவல் தொழில்நுட்ப மன்றம்
25. நூலக மன்றம்
26. இதழியல் மன்றம்
27. இசை மன்றம்
28. கவின் கலை மன்றம்
29. செஞ்சுருள் சங்கம்
30. வினாடி வினா மன்றம்
31. சாலைப் பாதுகாப்புப் படை
32. விளையாட்டுச் செயல்பாடுகள்
33. தொழிற்கல்வி மன்றம்

## அகமதிப்பீடு மதிப்பெண்கள்

| வருகைப் பதிவு | உள்நிலைத் தேர்வுகள் | | | | ஒப்படைவு/ செயல்திட்டம்/ களப்பயணம் | கல்வி இணைச் செயல்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | தேர்வு -1 | தேர்வு -2 | தேர்வு -3 | தேர்வு -4 | | | |
| ................... | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். | | | ................ | ................ | ................ | ................ |



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

# அரசு மாதிரி வினாத்தாள் - 2018-19

## தமிழ்

**நேரம் : 15 நிமிடம் + 3 மணி***] அரசின் புதிய அறிவிப்பின் படி **மொத்த மதிப்பெண்கள் : 90**

**செய்யுள், உரைநடை:** பலவுள் தெரிக. [6× 1 = 6]

1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (i) | பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம் | - 1. பாப்லோ நெரூடா |
| (ii) | தோற்காத பெருநகரம் ஒன்று கண்டேன் | - 2. மல்லார்மே |
| (iii) | கத்தரிக்கோலால் காலத்தை வெட்டமுடியாது | - 3. வால்ட் விட்மன் |
| (iv) | கேள் என் மாலுமிகளின் பாடலை | - 4. மனோரமா பிஸ்வாஸ் |

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 2, 1 ஈ) 4, 1, 2, 3

2. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்

ஈ) இளையதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

3. இராசசிம்மேச்சுரம் என அழைக்கப்படும் கோவில்

அ) திருப்பத்தூர் திருத்தளி நாதர் கோவில்
ஆ) தஞ்சைப் பெரிய கோவில்
இ) காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்
ஈ) தாராசுரம் ஐராவதேசுவரர் கோவில்

4. பெட்டிக்கு வந்தபின்
எல்லாக் காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள்
என்ற ஜப்பானிய ஹைக்கூவின் குறியீடு

அ) பழங்கள் ஆ) தேங்காய்கள் இ) மனிதர்கள் ஈ) பெட்டிகள்

5. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம் இ) அமைச்சர் மன்னரிடம்
ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

6. 'விஞ்ஞானி' எனும் தலைப்பிலான கவியரங்கக் கவிதையைப் படித்தவர் யார்? யாருடைய தலைமையில் படிக்கப்பட்டது?

அ) இன்குலாப், சுரதா ஆ) பிரமிள், முடியரசன் இ) மீரா, கண்ணதாசன்
ஈ) ஆத்மாநாம், வாணிதாசன்

**இலக்கணம், மொழிப்பயிற்சி:** [8 × 1 = 8]

7. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான்.
- இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores



11ஆம் வகுப்பு

# அரையாண்டுத் தேர்வு - 2019

## தமிழ்

பதிவெண் | | | | | | |

**நேரம் : 3.00 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**பகுதி - I**

**(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14 × 1 = 14

**(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

2. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை :

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

3. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடையை தேர்வு செய்க.

1. விரியன் - i) தண்டை
2. திருகுமுருகு - ii) காலாழி
3. நாங்கூழ்ப்புழு - iii) சிலம்பு
4. குண்டலப்பூச்சி - iv) பாடகம்

அ) 1-iii, 2-iv, 3-ii, 4-i ஆ) 1-iii, 2-i, 3-iv, 4-ii
இ) 1-iv, 2-iii, 3-ii, 4-i ஈ) 1-iv, 2-i, 3-iii, 4-ii

4. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்

5. காவடிச்சிந்தின் தந்தை :

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்

6. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

7. செங்கயல் - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உரிச்சொற்றொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is only for Sample
for Full Book order Online and Available at All Leading Bookstores

11ஆம் வகுப்பு

# மார்ச் வினாத்தாள் - 2020
## தமிழ்

**நேரம் : 3.00 மணி** (விடைகளுடன்) **மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** **(1)** அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும், அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

**(2)** **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக் கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

### பகுதி - I

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** [14 × 1 = 14]

1. வடகரை நாட்டில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை:
   அ) நாரை ஆ) தூக்கணாங்குருவி
   இ) உள்ளான் பறவை ஈ) கழுகு
2. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) குண்டலப்பூச்சி (i) பாடகம்
   ஆ) விரியன் (ii) தண்டை
   இ) திருகுமுருகு (iii) சிலம்பு
   ஈ) சாழல் (iv) விளையாட்டு
3. பேராசிரியர் சுந்தரனார் பிறந்த ஊர்:
   அ) பேரணாம்பட்டை ஆ) ஆலப்புழை
   இ) தென்காசி ஈ) புதுச்சேரி
4. கவிதையினைப் பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம். அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்று கூறியவர்:
   அ) மகாகவி பாரதியார் ஆ) இராசேந்திரன்
   இ) எர்னஸ்ட் காசிரர் ஈ) வால்ட் விட்மன்
5. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ................. என்பதாகும்.
   அ) தாள் ஆ) நூல்
   இ) ஓலை ஈ) எழுத்தாணி
6. சாந்திநிகேதனத்தில் உள்ள மரம் :
   அ) சமேலி ஆ) ஜூதீ
   இ) பியால ஈ) ஸேவுந்தி
7. பேசிடுக - என்பதன் இலக்கணக் குறிப்பு:
   அ) வியங்கோள் வினைமுற்று ஆ) வினைத்தொகை
   இ) தொழில் பெயர் ஈ) பெயரெச்சம்
8. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது :
   அ) மா முன் நேர் ஆ) காய் முன் நேர்
   இ) காய் முன் நிரை ஈ) கனி முன் நிரை
9. தவறான இணையைத் தேர்வு செய்க.
   அ) மண் + வளம் - மெய் + மெய்
   ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
   இ) கடல் + அலை - உயிர் + மெய்
   ஈ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
10. Sailor - என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்
    அ) மாலுமி ஆ) ஆவணம்
    இ) ஒப்பந்தம் ஈ) இனக்குழு
11. 'செவ்வி' - என்னும் சிறுகதையின் ஆசிரியர் :
    அ) புதுமைப்பித்தன் ஆ) நர்த்தகி நடராஜ்
    இ) பிரபஞ்சன் ஈ) சி.சு.செல்லப்பா
12. Value Education - என்பதன் கலைச்சொல் :
    அ) குழுக் கல்வி ஆ) ஆற்றல் கல்வி
    இ) மதிப்புக் கல்வி ஈ) முது கல்வி
13. "கல்லதர்" - என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதிகளைத் தேர்வு செய்க.
    அ) ஈறுபோதல். தன்னொற்றிரட்டல்
    ஆ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
    இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
    ஈ) தனிக்குறில் முன் ஒற்று, உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
14. ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல் :
    அ) அச்சம் ஆ) காய்ச்சல்
    இ) கப்பல் ஈ) தேர்தல்

### பகுதி - II - பிரிவு - 1

**குறிப்பு :எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** [3 × 2 = 6]

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. மதீனா நகரம் ஒரு பொன்னகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள
    - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?
18. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** [2 × 2 = 4]

19. 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. "ஃப்ரெஸ்கோ" என்ற சொல்லின் பொருள் யாது? இவ்வகை ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன?
21. "தொழு உரம்" என்றால் என்ன?

### பிரிவு - 3

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** [7 × 2 = 14]

22. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
23. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
    அ) தண்டுடை ஆ) புவியாட்சி
24. உள்ளுறை உவமம், இறைச்சி விளக்குக.
25. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.
    அ) # ஆ) ^



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
Send Your Study Materials to Our E-mail ID: Padasalai.Net@gmail.com